# களத்தில்




எமது வீர சுதந்திர வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப் பட்டிருக்கிறது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக, எமது போராட் டத்தின் உயிர்மூச்சாக, எமது போராளி களின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்குசக்தியாக அமைந்துவிட்டது. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள், சுதந்திரச் சிற்பிகள், எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


(18.11.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (198) அன்பளிப்பு : 60 p


### வன்னிப் பெருநிலப்பரப்பை மீட்டபடி தொடரும்

# ஓயாத அலைகள் 3...

### சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புத் தளங்களை சிதைத்து அழித்தபடி தொடரும் வரலாற்றுச் சமர்.

- ★ தமிழீழத் தேசியத் தலைவரின் மிகநுணுக்கமான சிறந்த தந்திரோபாய திட்டமிடல்.
- ★ தலைவரின் நேரடி வழிநடத்தல்.
- ★ தலைவரின் சிந்தனையை திட்டத்தை செயற்படுத்தும் துடிப்புடன் களம் புகுந்த சாள்ஸ் அன்ரனி படையணி, ஜெயந்தன் படையணி, கிட்டு பீரங்கிப் படைப்பிரிவு, மாலதி படையணி, அன்பரசி படையணி, சிறுத்தைப் படையணி, சோதியா படையணிகளுடன் அண்மையில் உருவாக்கப்பட்ட பல படையணிகள்.
- ★ தமிழர் படையணிக்கு பின்புலப்பலமாய் மலையாக நின்ற மக்கள்.

தலைவரின் பின்னால் அலையெனத் திரண்ட இந்தப் பலமே.. ஓயாத அலைகளாகி.. சிங்களத்தின் ஆக்கிரமிப்புக் கனவுகளை அழித்தொழித்தபடி, விடுதலைக்கான சேதியை எதிர்வுகூறுகின்றது.

சிறிலங்காப் படையினர் பல ஆண்டுகள் கடுமையாக முயற்சித்து, பல ஆயிரம் படையினரை உயிர் விலைகொடுத்து, கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான இராணுவ தளபாடங்களை இழந்து கட்டிய கற்பனைக் கோட்டை, விடுதலைப் புலிகளால் சில நாட்களில் தகர்க்கப்பட்டன.

உலகத்தையும் அதன் இராணுவ விற்பனர்களையும் தேசப்படத்தில் கண்ணுக்குப்பிடிபடாத அச்சிறு நிலப்பரப்பில் குவியப்பண்ணிய இராணுவ விந்தை நகர்ந்த பாதை இதுதான். (தொடர்ச்சி 3ம் பக்கம்)



**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# பேரெழுச்சி ஆண்டின் பேரெழுச்சி

1999ஆம் ஆண்டினை தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் போரெழுச்சி ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருந்தார். இந்தப் பிரகடனம் தமிழீழ மக்களை பேரெழுச்சி கொள்ளவைத்தது. அந்தப் பேரெழுச்சியின் வலிமையை ஓயாத அலைகள் - 3 வன்னிப் போர்க்களத்தில் சர்வதேச உலகிற்கு நிரூபித்து நிற்கிறது.

"எங்கள் மண்ணை எதிரி படைபலம் கொண்டு ஆக்கிரமிக்கலாம், ஆனால் ஆக்கிரமித்து நிற்கும் எதிரி எங்கள் மண்ணில் நிலைத்து நிற்க நாங்கள் ஒரு பொழுதும் அனுமதிக்கமாட்டோம். ஆக்கிரமித்து நிற்கும் எதிரிக்கு எங்கள் மண்ணே கல்லறையாகும்" - என்பது எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் யாழ்குடாநாட்டை ஆக்கிரமித்த சிறீலங்காவுக்கு விடுத்த எச்சரிக்கை மொழி.

இந்த எச்சரிக்கையை அலட்சியம் செய்த சிறீலங்கா ஓயாத அலைகள் -1இன் மூலம் 1996இல் முல்லைத்தீவு மண்ணில் முதல் பாடத்தை பெற்றது. அடுத்து ஓயாத அலைகள் -2இன் மூலம் 1998இல் கிளிநொச்சியில் அடுத்த பாடத்தை படித்தது.

ஆயினும் சிறீலங்கா அரசாங்கத்தின் சிங்கள பௌத்த பேரினவாதவெறி அடங்கியதாக இல்லை. ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையின் மூலம் வன்னிப் பெருநிலப் பரப்பு மீதான கொடிய ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஆரம்பித்து தமிழீழத்தின் நிலப்பரப்பு தொடர்புகளை அறுக்கவும் சிங்களக் குடியேற்றங்களை வேகப்படுத்தி தமிழீழத்தின் மக்கள் தொகை அமைப்பை மாற்றி அமைக்கவும் சந்திரிகா அரசாங்கம் முயன்றது. தமிழீழத் தாயகத்தின் உட்கட்டுமானத்தை அழிக்க யாழ்குடா நாட்டை ஆக்கிரமித்த சந்திரிகா அந்த ஆக்கிரமிப்பை நிரந்தரமாக்க தனது இராணுவத்திற்கு தரைவழி வழங்கல்களை ஒழுங்குபடுத்த பாதைதிறப்பு அவசியமாகியது. மேற்சொன்ன அரசியல் நோக்கங்களுடன் வெற்றி நிச்சயம் என்ற பொருள்படும் ஜெயசிக்குறுய் என்ற சிங்கள இராணுவக் குறியீட்டுப் பெயரைக்கொண்ட யுத்த முனையை சந்திரிகா திறந்தார். 18மாதங்கள் பல ஆயிரக் கணக்கான சிங்களப் படையினரை குவித்தும், பல பில்லியன் ரூபாக்கள் மதிப்புள்ள இராணுவ ஆயுதங்களையும் தளபாடங்களையும் பயன்படுதத்தியும் வன்னிப் பெருநிலப்பரப்பில் மாங்குளம்நகர் வரை சிறீலங்கா ஆக்கிரமித்தது. இதன் பின்னர் நாளொன்றுக்கு 2.4 மிலிலியன் ரூபாக்களை செலவழித்து தான் ஆக்கிரமித்த பகுதிகளில் தன் படையினரை நிலைகொள்ள வைத்திருந்தது. ஆயினும் இம்மாதம் முதலாம் திகதி முதல் நடந்து வரும் ஓயாத அலைகள் - 3 இராணுவ நடவடிக்கை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் சிறீலங்காப் படையினர் ஆக்கிரமித்த வன்னிப் பெருநிலப்பரப்பின் பெருமளவிலான பகுதிகளை ஐந்தே ஐந்து நாட்களில் மீட்டு வெற்றி நடையிட்டு வருகின்றனர்.

இது குறித்து கருத்துரைத்த பிரபல செய்தியாளர் சூசன்னா பிரைஸ், ஒட்டுசுட்டான் இராணுவ முகாமை ஒன்பது மணித்தியாலங்களில் விடுதலைப் புலிகள் கைப்பற்றினார்கள். நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் முகாம்கள் மீதான தாக்குதலை விடுதலைப் புலிகள் மிக கவனமாகத் திட்டமிட்டே நடத்தியுள்ளபோதிலும் இவ்வளவு குறுகிய காலத்தில் இம் முகாம்களையும் கட்டளைத் தலைமை முகாம்களையும் உள்ளடக்கிய பத்து இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றுவார்கள் என யாருமே எதிர்பார்க்கவில்லை என வியந்துள்ளார். அத்துடன் தேசிய



இனங்களுக்கு இடையிலான இந்த பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியம் இல்லை என்பது உறுதியாகி உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அதிக அளவில் ஆயுதங்களை வழங்கிய நாடாக சிறீலங்காவை கிண்டல் செய்துள்ள மற்றொரு சர்வதேச செய்தி நிறுவனம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கனரக ஆயுதங்களும் தளபாடங்களும்தான் பற்றாக்குறையாக இருந்தது, இந்தக் குறைபாட்டை தற்போதைய யுத்தத்தின் மூலம் சிறீலங்கா தீர்த்து வைத்துள்ளது எனவும் அந்த செய்தி நிறுவனம் கேலி செய்துள்ளது. மற்றொரு செய்தித் தகவல் ஊடகம் சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தான் வன்னியைக் கைப்பற்றி தலைவர் பிரபாகரனுடன் கைகுலுக்கும் வரை இப் போரைத் தொடரப் போவதாக கூறினார். ஆனால் தற்பொழுது வன்னி வரை வீணாக நடந்துவர வேண்டாம் நானே என் பகுதிகளை மீட்டு உன்னுடன் கைகுலுக்கத் தயார் என வந்து நிற்கின்றார் என ரத்வத்தையின் அறியாமையை அம்பலப்படுத்தியுள்ளது. புலிகளை காட்டுக்குள் அனுப்பிவிட்டோம் என்ற சந்திரிகா அரசாங்கத்தினரின் படையினர்க்கு இன்று காடே புலியாக தென்படும் அளவுக்கு கிலி பிடித்து சந்திரிகா அரசாங்கம் வாங்கிக் குவித்துவைத்திருந்த பல பில்லியன் ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் போட்டுவிட்டு தலை தப்பினால் காணும் என வன்னியில் நின்று பின் வாங்கி ஓடுகின்றனர்.




தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டமையே சிறீலங்காவின் படுதோல்விகளுக்கு மூலகாரணம் என அனைவருமே ஒப்புக்கொண்டு வருகின்றனர். ஓயாத அலைகள் -3 தமிழீழ மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உள்ள ஆத்மார்த்தமான அன்னியோன்னிய உறவுகளை உலகிற்கு வெட்ட வெளிச்சமாக்கி மக்கள்வேறு புலிகள்வேறு என்ற சந்திரிகாவின் பரப்புரையின் போலித்தனத்தை தோலுரித்துக் காட்டியுள்ளது. சிறீலங்கா அரசாங்கத்தின் செய்தித் தணிக்கைகளையும் சர்வதேசப் பரப்புரைகளையும் தகர்த்தெறிந்து உண்மைத் தகவல்களை வெளியுலகிற்கு தெரிவிப்பதில் விடுதலைப் புலிகளின் செய்தி தகவல் பிரிவு அபார சாதனைபடைத்து வருகிறது. இதனால் உலகின் பெரும்பாலான தகவல் சாதனங்கள் இன்று வன்னிக்களம் குறித்த உண்மைத் தகவல்களை பிரசுரிப்பதில் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளன. இதன் மூலம் விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பல்ல தமிழீழ மக்களின் தேசிய விடுதலையினை முன்னெடுக்கும் மக்கள் இராணுவம் என்ற உண்மையை உலகு இனங்காணத் தொடங்கியுள்ளது. அத்துடன் விடுதலைப் புலிகளை கரந்து தாக்கும் படையினர் என்ற பார்வையில் பார்க்கும் நிலை மாறி மரபுவழி இராணுவம் என்ற தகைமையில் பார்க்கும் தன்மை பெருவளர்ச்சி பெற்றுள்ளது. இதனால் உள்நாட்டுப் பிரச்சினை என்ற சிறீலங்காவின் நியாப் படுத்தல் மாறி தமிழர் பிரச்சினை இருநாடுகளுக்கிடையிலான சிக்கல் என்ற பார்வை தெளிவாகி வருகிறது.

தமிழீழ மக்கள் ஓயாத அலைகள் - 3 இன் வெற்றியில் அக்களித்து ஆர்ப்பரிப்பதும் அல்லாமல் களத்தில் அனைத்து அம்சங்களிலும் தங்கள் உச்சப் பங்களிப்பை வழங்கி வருவதே என்றுமில்லாத அளவுக்கு குறைந்த நேரத்தில் அபார வெற்றிகளை விடுதலைப் புலிகள் ஈட்டிச்செல்ல உதவிவருகின்றது. புலம்பெயர் தமிழீழ மக்களின் நிதியும் ஆதரவுகளுமே தமிழீழ விடுதலைப் புலிகளின் அபரிதமான வளர்ச்சிக்கு மற்றொரு காரணமென மற்றொரு சர்வதேச செய்திஏடு குறிப்பிட்டுள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

ஓயாத அலையாகத் தமிழீழ மண்ணில் ஆக்கிரமித்து நிற்கும் ஆக்கிரமிப்பாளர்கள்மேல் தமிழீழ மக்களின் தாக்குதல்கள், அவர்கள் தமிழீழ மண்ணைவிட்டு அகலும் வரை தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதற்கு உதாரணமாக ஓயாத அலைகள் - 3 பொங்கி எழுந்து வன்னிப் பெருநிலப்பரப்பில் எதிரிகளை விழுங்கிக் கொண்டிருக்கிறது. இந்நிலை தமிழீழத்தின் ஒவ்வொரு அங்குலத்திலும் தொடரும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் வெற்றிக்குவிப்புக்கள் சான்று பகர்கின்றன. இதனை உணர்ந்து சிறீலங்கா தனது ஆக்கிரமிப்புப் படைகளை விலக்கி அமைதிப்பேச்சுக்களை தொடங்கி வீணான அழிவுகளை தவிர்த்துக் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. தமிழீழ மக்களின் போரெழுச்சி ஆண்டு பேரெழுச்சி ஒன்றை விடுதலைப் போராட்ட வரலாற்றில் தொடக்கி வைத்துள்ளது. இந்த பேரெழுச்சி விடுதலை மலர்ச்சியாக மாறுவதற்கும் சிறீலங்காவால் திட்டமிட்ட வகையில் இனஅழிப்புக்கு உள்ளாக்கப்பட்டு நாசமாக்கப்பட்டுள்ள எமது மக்களும் தேசமும் விரைவாக வளர்ச்சி பெறுவதற்கும் புலம்பெயர் தமிழீழ மக்களாகிய நாம் உச்ச உதவிகளை நிதியாகவும் மதியாகவும் வழங்க வேண்டிய நேரம் இது. புலம்பெயர் தமிழீழ மக்களின் உதவிகளிலேயே தேச விடுதலையின் விரைவு தங்கியுள்ளது. இதற்கு எம்மால் இயன்றதை உடன் செய்வதிலேயே நாம் இதயபூர்வமான பங்களிப்பைச் செய்தவர்களாவோம். வன்னிக்களத்தின் மாபெரும் வெற்றிகளுக்காக தம்மை ஈந்த மாவீரர்களுக்கும் கடுமையாக உழைத்து நிற்கும் தளபதிகளுக்கும் போராளிகளுக்கும் அனைத்து வெற்றிகளுக்கும் மூலகாரணமாக உள்ள மக்களுக்கும் அவர்களின் ஆற்றல்மிகு தேசத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கும் புலம்பெயர் தமிழர்கள் தங்கள் பங்களிப்பால் தங்கள் அன்பையும் ஆதரவையும் வாரி வழங்கி நிற்பதை இம்மாதம் பிறந்தது முதல் புலம்பெயர் தமிழீழ மக்களிடை காணப்படும் ஆர்வமும் அக்கறையும் உலகிற்கு தெளிவாக்கி நிற்கிறது.

| AUSTRALIA | CANADA | DENMARK | FRANCE | GERMANY | ITALY |
| --- | --- | --- | --- | --- | --- |
| TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | TCG<br>Postfach 340251,<br>51624 Gummersbach. | TCC<br>Via Vinsenzo Di Pavia No14,<br>90138 Palermo. |

| NETHERLANDS | NORWAY | SWITZERLAND | SWEDEN | UNITED KINGDOM | U.S.A |
| --- | --- | --- | --- | --- | --- |
| TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | W.T.C.C.<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |

(1ம் பக்கத் தொடர்ச்சி)


# ஓயாத அலைகள் 3...

### முதற்குறி ஒட்டுசுட்டான். நவம்பர் 2ம் திகதி




நள்ளிரவு தாண்டி, அதிகாலைப் பொழுது விடுதலைப் புலிகளின் சிறப்புப்படையணிகள், இராணுவத்தின் பலம் வாய்ந்த கோட்டைகளில் ஒன்றாகத் திகழ்ந்த ஒட்டு சுட்டானை குறிவைத்துப்பாய்கின்றன. இருமுனைகளில், அதன் பாதுகாப்பு வேலிகளைத் தகர்த்தபடி, உள் நுழைந்த விடுதலைப் புலிகள், முகாமின் முக்கிய பகுதி களைக் கைப்பற்றி, சிலமணிநேரக் கடும் சண்டையின் பின் இராணுவ முகாமை முழுமையாக கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்தனர். ஒட்டுசுட்டான் பகுதியும், அதனைச் சூழஉள்ள பகுதிகளும் 2ம் திகதி காலையே விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.


### இரண்டாவது குறி நெடுங்கேணி. நவம்பர் 3ம் திகதி




ஒட்டுசுட்டானை மீட்டெடுத்த விடுதலைப் புலிகள், அங்கிருந்து தென்திசைவழியே நகர்ந்து நெடுங்கேணியை குறிவைத்தனர். மிகக்கடுமையான சண்டையைத் தொடர்ந்து, நெடுங்கேணியும் அதனைச் சூழஉள்ள பகுதிகளும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. நவம்பர் மூன்றாம் திகதி அதிகாலை, இராணுவத்தின் இரண்டாவது முகாமும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இவ் இருநாட்கள் நடந்த சண்டைகளில் பலநூற்றுக் கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெருந் தொகையான இராணுவ தளபாடங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிக்கொண்டனர். இருமுகாம்களையும் அழித்தொழிந்து, பெரும் நிலப்பரப்பை மீட்டெடுக்க, இவ்விரு நாட்களிலும் நாற்பது விடுதலைப் புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர்.


### மூன்றாவது குறி அம்பகாமம். நவம்பர் 4ம் திகதி




ஒட்டுசுட்டானில் இருந்து தென்திசைவழியே முன் னேறி நெடுங்கேணியை விடுதலைப் புலிகளின் ஒரு அணி மீட்டிருக்க, மற்றுமொரு அணியோ ஒட்டுசுட்டானின் வடமேற்குத் திசையில், விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் துருத்திக்கொண்டிருந்த அம்பகாமப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவமுகாம்மீது தாக்குதலைத் தொடுத்தது. இன்று நடந்த கடும் சண்டையில், அம்பகாமப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ வேலிகளும், இராணுவ மினிமுகாம்களும் தகர்க்கப்பட்டன. அம்பகாமத்தின் பெரும் பகுதி மீட்கப் பட்டது.

மூன்றுநாட்கள் நடந்த சண்டையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அறுபது விடுதலைப் போராளிகள் இம்மூன்றுநாட் சண்டைகளில் வீரச்சாவடைந்துள்ளனர்.

### நான்காவதுகுறி கரிப்பட்டமுறிப்பு, ஒலுமடு, அம்பகாமம், மாங்குளம். நவம்பர் 5ம் திகதி காலை




சிறீலங்காஅரசபடையினர் தமது தகுதிவாய்ந்த இராணுவ வெற்றியாக மார்தட்டி பறைசாற்றிய மாங்குளம், இன்று விடுதலைப் புலிகளால் சிலமணிநேரத் தாக்கு தலிலேயே மீட்கப்பட்டது. நன்கு பலப்படுத்தப்பட்டு, அடுத்த நகர்வின் தொடக்கமாக பாதுகாக்கப்பட்டுவந்த மாங்குளம் இராணுவமுகாமுடன், கரிப்பட்டமுறிப்பு, ஒலுமடு, அம்பகாமம் ஆகிய இராணுவ முகாம்களும் விடுதலைப் புலிகளால் முற்றாக மீட்கப்பட்டன. கவசவாகனங்கள், றக்வண்டிகள், ஜீப்வண்டிகள், கனரக மின்பிறப்பாக்கிகள், இராணுவ அம்புலன்ஸ் வாகனங் கள், பெரும் இராணுவக் களஞ்சியங்கள், உணவுக் களஞ்சியங்கள் என்பன விடுதலைப் புலிகளின் கைகளில் வந்தன.

நான்கு நாட்கள் நடந்த சண்டைகளில் எண்பத்தி யொரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

### ஐந்தாவதுகுறி கனகராயன்குளம். நவம்பர் 5ம் திகதி இரவு





சிறீலங்கா இராணுவத்தின் முக்கியமான ஆக்கிர மிப்பு மையமாகவும், இராணுவத்தின் 55ம் 56ம் டிவிசன் களின் தலைமையகத்தையும், பல கனரக ஆட்டிலறித் தொகுதிகள் அடங்கிய மையமாகவும் திகழ்ந்த பகுதி கனகராயன்குளம். வன்னியில், முழுவிறியோகங் களுக்குமான வெடிபொருட்களைக் கொண்ட பெரும் இராணுவக் களஞ்சியத்தையும், இராணுவ உயர் அதிகாரிகள் தங்கும் நவீன தங்குமிடங்கள், சகல வசதிகளையும் கொண்ட கட்டளைச் செயலகங்கள், நவீனதொலைத் தொடர்பு சாதனங்களைக்கொண்ட மையங்கள் அடங்கிய பாரிய இராணுவ நகராகவும் விளங்கிய கனகராயன்குளம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது. மாங்குளத்தை மீ ட்டெடுத்த விடுதலைப் புலிகள் 5ம்திகதி இரவு நடத்திய கடுமையான தாக்குதலின்பின் கனகராயன்குளம்நகரை மீட்டெடுத்தனர். 5ம் திகதி இரவு, கனகராயன்குளத்தில் விடுதலைப் புலிகளின் படையணிகள் மையங்கொண்டு, அடுத்த குறிநோக்கிய நகர்வுக்கு ஆயத்தமாகின. மறுவளத்தே, நெடுங்கேணி புளியங்குளம் வீதியில் புளியங்குளம் நோக்கி நகர்ந்த விடுதலைப் புலிகளின் மற்றுமொரு படையணி, நயினாமடு மதியாமடு பகுதிகளை மீட்டெடுத்தன.

கனகராயன்குளத்தில், பெரும் இராணுவ வளத்தை விடுதலைப்புலிகள் தமதாக்கிக்கொண்டனர். பெரும் எண்ணிக்கையில் சிங்களப்படையினர் கொல்லப்பட்டனர்.




### ஆறாவதுகுறி புளியங்குளம் நவம்பர் 6ம் திகதி.




மிகமுக்கியமான இராணுவமையமாக விளங்கிய புளியங்குளம் நகரும் அதனை அண்டிய பிரதேசங்களும், ஓயாத அலைகள் 3 இராணுவ நடவடிக்கை தொடங்கி ஐந்தாவது நாளில் விடுதலைப் புலிகளால் முற்றாக மீ ட்கப்பட்டன. நெடுங்கேணி ஒட்டுசுட்டானுக்கான விநியோக பாதையாகவும், பிரதான நெடுஞ் சாலையில் முக்கிய தளமாகவும் கொண்டிருந்த இப்பகுதி, சிலமணிநேரத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன. பெரும் இராணுவ வளங்கள் அள்ளப்பட்டன.

### அடுத்தகுறி.....

சிறீலங்கா ஆக்கிரமிப்புப்படை, ஜெயசிக்குறுய் நடவடிக்கை மூலமும், றிவிபல, ரணகோச, வோட்டர் செற் என பற்பல பெயர் சூட்டி, பலகட்டங்களாக இரண்டரை வருடங்களாக நடத்திய ஆக்கிரமிப்பு நகர்வை விடுதலைப் புலிகள், ஆறே நாளில் தகர்த்து எறிந்தனர். ஆக்கிரமிப்புப் பெரும் பூதத்தின் முதுகெலும்பை உடைத்துப்போட்டனர்.

எதிரிக்கு குறிதெரியாமல், தன் இலக்கு நோக்கி நகர்ந்துவரும் ஓயாத அலைகள் 3, திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தால் அபகரிக்கப்பட்ட மணலாற்றுப் பிரதேசத்தையும் மீட்டுவருகின்றது. முதல் ஒருவாரச் சண்டையில், மணலாற்றில் ஆறு இராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டன. பல பகுதிகளில் இருந்து பின்வாங்கி ஓடியது.

முடிவில்லாமல் தொடரும் ஓயாத அலைகள் 3இன் இலக்குத்தான் என்ன?

இந்த வரலாற்றுத்தாக்குதலை திட்டமிட்டு வழி நடத்தும் தலைவருக்கும், தலைவரின் வார்த்தைகளை மந்திரமாய் உச்சரித்தபடி வெற்றிகளைக் குவித்துவரும் போராளிகளுமே அறிவர்.

# அத்துமீறிய குடியேற்றமும் அநாதரவான தமிழினமும்

தமிழர் தாயகமாக கருதப்படும் வடகிழக்கில் - அன்றில் இருந்து இன்று வரை இவ்வுலகத்தீவில் ஆட்சி செலுத்திவரும் சிங்களப் பேரினவாதக் கட்சிகளின் தலைவர்கள் திட்டமிட்ட சதிவலையில் சிங்களவர்களை குடியேற்றி வந்துள்ளனர்.

1930ஆம் ஆண்டில் டீ.எஸ் சேனனாயக்கா அவர்களின் மூளையில் இது நன்கு பதிந்துள்ளது என்பது தெட்டத் தெளிவாக உணரக்கூடியாதய் இருக்கின்றது.

தமிழர்களைக் கீழ்மைப்படுத்தி அவர்களது பூர்வீக நிலங்களைச் சிதைத்து துண்டாடும் திட்டங்கள் முதல் கட்டமாக கிழக்கு மாகாணத்தில்தான் ஆரம்பிக்கப் பட்டன.

'ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம்' என்ற பெயரில் பட்டிப்பளை, 'கல்லோயா' வாகவும் நீர்ப்பாசனக் குளங்களை புனரமைப்புச் செய்கின்றோம் என்ற பூச்சாண்டியில் பதிவில்குளம், 'பதவியா' என்ற பெயராகவும் மாறியது. 'அல்லை', 'கந்தளாய்' குளங்கள் சிங்களவரின் வயல்களுக்கு தமிழர் பிரதேசத்தின் நீரைப்பாய்ச்சும் திட்டமானது.

1960ஆம் ஆண்டு சிங்களவர்களை பெரும்பான்மை யாகக் கொண்ட அம்பாறை மாவட்டம் தோற்றம் பெற்றது. 1970ஆம் ஆண்டு 1500 சதுரமைல் பரப்பிளவில் 'அம்பாறை' 'சேருவாவில' என சிங்களத் தொகுதிகள் முளைத்தன. இதேபோல் மணலாற்றில் 3650ற்கு மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் திகதி நாயாற்றுக்கு மேற்கேயும், தெற்கேயும் உள்ள பல தமிழ்த் தொன்மைக் கிராமங்கள் சிங்கள குடியேற்றமாக மாறியது. இதன் விளைவு 1986ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் 'வெலிஓயா' என்ற பெயரில் சிங்கள வாக்காளர் பட்டியல் இணைக்கப்பட்டது.

1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி இலங்கை அரசினால் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டத்தின் பெரும்பகுதி விசேட பாதுகப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டது. சிங்களக் குடியேற்றங்களுக்கு பாதுகப்பு வழங்குவதாற் காக அரசினால் முன்வைக்கப்பட்ட பிரகடனம் இது என்பது தெளிவு.

திருமலை மாவட்டத்தை உற்று நோக்குவோம். இது வடகிழக்கு தமிழர் தாயகத்தின் முக்கிய வரலாற்றுப் புகழ் மிக்க ஒரு மாவட்டமாகும். இங்கு சிங்களக் குடியேற் றங்கள் எல்லை மீறியதாகவே உள்ளன.

இங்கு 1962ஆம் ஆண்டிற்கு முன்பே குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ளன. பனிக்கட்டிமுறிப்பு என்ற தமிழ்ப் பெயர் 'பனிக்கட்டியாவ' என மாற்றப்பட்து. பன்குளத்தின் அருகே அமைந்த ஊர்தான் பனிக்கட்டிமுறிப்பு எனப்படுவது. இங்கு ஒரு விகாரையும் நிறுவ சிங்களவர் கள் முயன்றனர். இது எட்வேட் என்னும் இங்கிலாந்து அரசர் காலத்திலும்கூட தனித் தமிழ் கிராமமாக இருந்த மைக்கான வரலாற்று ஆவணங்கள் இன்றும் உள்ளன.

பன்குளத்தில் உள்ள கனகசபை என்ற தமிழ் மகனின் சொந்தக் காணியை அபகரித்து. 1973-03-27 ஆம் திகதி சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளரும், அமைச் சருமாக இருந்த கே.பி.இரத்நாயக்கா பௌத்த பாடசாலைக்கு அடிக்கல் நாட்டினார். விஸ்வராமாசாபாவ பௌத்த கோயில் அடிக்கல் நாட்டு விழாவும் தமிழர் பூமியில் அன்று கோலாகலமாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கப்பல்துறை, பாலம்போட்டஆறு ஆகிய இடங்களில் உள்ள தமிழர்களின் காணிகளில் சுமார் 5000 ஏக்கரில் சிங்களக் குடும்பங்களை குடியமர்த்த வேண்டு மென, 04-09-1954இல் தீர்மானமிடப்பட்ட திருமலை துறைமுக அதிகாரசபையின் தீர்மானத்தை செயல்ப் படுத்த வேண்டுமென பலர் வெளிப்படுத்தினர். பன்றி இறைச்சிக்கடை நடத்திய பொடியப்பு சிங்கோ என்ற சிங்களவரின் மனைவிக்கு சமாதான நீதவான் பதவி கிடைத்தது. அத்துடன் பன்றி இறைச்சிக்கடை பொடியப்பு சிங்கோ, பௌத்த விகாரையின் கமிட்டி தலைவராகவும் இருந்துள்ளார்.

கட்டுக்குளப்பற்று மேற்கு, எல்லையில் உள்ள குருவியின்குளம், பொய்ஒடிச்சான்குளங்களோடு தொடர்புடைய காட்டுப் பிரதேசத்தை திருமலை அரச அதிபரே நிர்வகித்து வந்தார். அதை பௌத்தவிகாரை பரிபாலனசபை 1988இல் பொறுப்பேற்று குடியேற்றத்தை உருவாக்கியது. அதுமட்டுமன்றி முதலிக்குளத்தின் அருகே விமானப்படை முகாமையும் சிங்களக் குடியிருபையும் உருவாக்கி- முதலிக்குளம் என்ற தமிழ் பெயரை 'மொறவேவ' என்ற பெயரோடு ஊரை நிறுவி, தமிழர் களின் 340ஏக்கர் நீர்ப்பாசனக்காணியும் பறித்தெடுக்கப் பட்டு - பாரிய சிங்கள குடியேற்றமாக மாறியது. இவ்வாறாக மாறி,மாறி ஆடசிபீட மேறிய சிங்கள அரசுகள் இன்று (1998) சுமார் 128ற்கும் மேலாக திருமலை மண்ணில் சிங்களக்க கிராமங்களை உருவாக்கியுள்ளன.

இம்மாவட்டத்தில் உள்ள பெரியகுளம் என்னும் தமிழ் பிரதேசத்தில் 500ஏக்கர் நிலத்தை பௌத்த விகாரை களுக்கும் சிங்களக் குடிகளுக்கும் கொடுக்கவேண்டிய 1965 யூலை 26ஆம் திகதி திருமலைக் கச்சேரியில் உயர் அதிகாரிகளின் கூட்டம் நடைபெற்றது. இவ்வாறான மகா நாடுகள் மூலம் 1973ஆம் ஆண்டில் 10738 குடும் பங்கள் இம் மாவட்டத்தில் அத்துமீறிக் குடியேறியுள்ளன.



இது அன்று வெளியான 'சுதந்திரன்' இதழின் கருத் தாகும்.

தமிழ் மக்களின் தாயகத்தை துண்டாடுவதில் இவ்வரசாங்கங்கள் காட்டிய ஆர்வத்தையும் அவாவையும் அப்பட்டமாகப் படம் போட்டுக் காட்டுகின்ற இவ்வாக்கு மூலம் வாசகர்களின் அறிதலுக்காகக் கொடுக்கப்பட வேண்டியதே.

1983ஆம் ஆண்டு வான்ஓயா, மல்வத்துஓயா பிரதேசங்களில் சிங்கள குடியேற்றும் வேலைகள் ஆரம்பித்துவிட்டன. மாகவலி அமைச்சரின் இந்த இரகசியத்திட்டத்தை தமிழர்கள் சிலர் தடுப்பதற்கான காரியங்களில் இயங்கி வந்தனர். இவற்றையொல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, 45000 மக்களை குடியேற்றுவதில் வெற்றிகண்டோம் என பேறிமன் குணரெட்ண ஒரு சமயம் கூறியிருந்தார்.

இந்தக் குடியேற்றங்கள் தாயகத்தை அழித்துவிடும் என்பது உண்மை. எனவேதான் திட்டமிட்ட முறையில் வலுகெட்டித்தனமாக, அன்று தொடக்கம் இன்றுவரை வடகிழக்கில் சிங்களக் குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டே வந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மல்வத்து ஓயா குடியேற்றத்தினூடாக மன்னாரை வடமேல் மாகாணத் திலிருந்து அப்புறப்படுத்தும் நாசகார நோக்கமும் இருந்தது. பதவியாக் குடியேற்றித்தினை பாதுகாக்கவும் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசமான வடக்கையும் கிழக்கையும் பிரித்து - தமிழ் மக்களை வேறுபடுத்தும் மையக்கல்லாகவும் வெலிஓயா குடியேற்றத் திட்டம் விளங்கிவருகிறது.

மேற்குறிப்பிட்ட குடியேற்றத்திட்டங்களில் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மகன், ரவி ஜெயவர்த்தனா முன்னின்று உழைத்தார். திருகோணமலைக்கு வடக்கே இருக்கும் யான் ஓயா பிரதேசத்தில் ஐம்பதாயிரம் மக்களை குடியமர்த்தி யாழ்ப்பாணத்திலிருந்து திருகோண மலையையும் மட்டக்களப்பையும் துண்டித்து பதவியாக் குடியேற்றத்தை வலுப்படுத்துவது இங்கு மாறி, மாறி ஆட்சிபீடமேறிய பேரினவாத அரசுகளின் உள்நோக்க மாகும்.

திருகோணமலை, வடகிழக்கு மாகாண அரசின் தலைநகரம் என்றும் தமிழ் மக்களின் பாரம்பரிய பூமி என்றும் தலைநிமிர்ந்து சொல்கின்றோம்.

அதே திருகோணமலையில் இன்று அதாவது 1998 வரை குடியேறியுள்ள சிங்களக் குடியேற்றங்களின் விபரத்தைப் பாருங்கள்.

01. சிறிமாபுர
02. அபயபுர
03. மிகிந்தபுர
04. 4ம் கட்டை
05. ஆண்டான்குளம்
06. வெல்கம்காரை
07. 10ம் கட்டை
08. மொறகிவன
09. மயில்வேவ
10. நாமல்வத்த
11. வானலை
12. கிளப்பன்பேக்
13. நாலந்த
14. கமதல்சுபுர
15. குறிஞ்சாக்குளம்
16. கொறவப்பொத்தான
17. 6ம் கட்டை
18. 20ம் கட்டை
19. கமதல்புர
20. புலஸ்திபுர
21. கோவில்வத்த
22. பாரியூற்று
23. கோவில்கடவல
24. 97-99ம் கட்டை
25. சீனிஆலை
26. ஜெயந்திபுர
27. ஜயபுர
28. தெகிவத்தை
29. நிலாப்பனை
30. அரிப்பு
31. கல்லாறு
32. அலிஒலுவ
33. சரசுரா
34. 1ம்,2ம் கொலனி
35. சிறிபுர
36. மட்கோ
37. சேருவில
38. கந்தளாய்
39. 13ம் கட்டை
40. பன்குளம்
41. செவல பேக்
42. மண்டலபுர
43. சுமதிபுர
44. சோமாபுர
45. எல் 1. பி.I.2
46. கல்மேபுயால
47. சாலியபுர
48. அக்கோபுர
49. கித்துளுத்து
50. அளுத்ஓயா
51. பொலிகண்டி
52. அடம்பன்
53. கல்லறவு
54. கிம்புள்பிட்டியாவ
55. மகாதீவுல்வேல
56. வேப்பங்குளம்
57. மல்கிபிறிப்
58. 98ம் கட்டை
59. லங்கிரிகடவைப்பு
60. கோமரல்கலெவ
61. நிலவுக்கடவேவ
62. ஒட்டிசாக்குளம்
63. மன்மதவாச்சி
64. சிங்கபுர
65. பொக்கியாட்
66. உள்பத்து
67. நாச்சிக்குடா
68. 5ம் கட்டை
69. 3ம் கட்டை
70. மொறவேவா
71. சுமித்ராவகம
72. மகாவல்கம
73. அல்லை
74. கொட்டுவே
75. கல்கட்டுவெல
76. கோம்புகட்டுவ
77. கல்கனிவெவ
78. மோறாமை
79. பொத்தலவெவ
80. குழுக்காவெல
81. மீசஸ்வெல
82. றொட்டுவேல
83. ஆனைக்கட்டி
84. கருந்தகம
85. பெக்கிலிகடவெவ
86. தெள்ளியா
87. சமந்தபுர
88. பராக்கிரமபுர
89.கிரிச்சண்டுகாயலிகள
90. 97- 92 93ம் கட்டை

இன்னும் எத்தனையோ இன்று முளைத்துள்ளன.

இந்த அத்துமீறிய குடியேற்றங்களால் அநாதரவா கியுள்ளது தமிழினமே.

*நன்றி — தினக்கதிர் ஏப்ரல் 1998*

*(மட்டக்களப்பில் இருந்து வெளிவரும் பத்திரிகை)*

# ஓயாத அலைகள்-3 ஏற்படுத்திய விவாதமும் தணிக்கையும்

ஓயாத அலைகள் 3 இராணுவ நடவடிக்கை சிறிலங்காவின் அரசியல் - இராணுவ தரப்பினரை மட்டுமல்ல முழுசிங்களத்தையும் தோல்விப் பீதிக்குள்ளும் விரக்திக் குள்ளும் தள்ளியுள்ளது. தமிழ் மக்களின் அரசியல் எழுச்சியை இராணுவ வன்முறை மூலம் சிதைத்து அழித்துவிடலாம் எனக் கங்கணம் கட்டிக் களமிறங்கிய சிங்களம் புலிகளின் பாரிய பலம்மிக்க இராணுவ எழுச்சியினைக்கண்டு அச்சம் கொண் டதை அவதானிக்க முடிகின்றது.

இவ் வெளிப்பாடுகளை சிங்களத் தின் செய்தி ஊடகங்களும் கொழும்பை மையமாகக் கொண்டு செயற்படும் சர்வதேச செய்தி நிறுவனங்களும் தமது செய்திகளில் வெளிக்காட்டி யிருந்தனர்.

வன்னிப் பெருநிலப்பரப்பு மீதான சிங்களத்தின இராணுவ நடவடிக்கை கடந்த இரு வருடங்களாகவே பெரும் விவாதத்தை ஏற்படுத்தி வந்தது. சத்ஜெய, எடிபல நடவடிக்கைகள் பெரும் ஈாப்பை ஏற்படுத்தது விட்டாலும் ஜெயசுக்குறுய் நடவடிக்கையை எமது தேசியத் தலைவர் கையாண்ட முறை யானது பெரும் விவாதங்களையும் தோல்வி பற்றிய பீதியையும் சிங்களத்திற்குக் கொடுத்தது. ஒவ்வொரு அங்குல நிலத்தையும் பிடிப்பதற்காக பெரும் விலை கொடுக்கும் நிலைக்கு சிங்களத்தை புலிகள் தள்ளியபோது அதன் எதிரொலிகள் சிங்களத் தரப்பில் எதிரொலித்தது. பின்னர் இடம்பெற்ற ரணகோச நடவடிக்கை யின் 4ம் 5ம் கட்டங்கள் பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்தின. சிங்கள ஆய்வாளர்கள் மத்தியில் புலிகளின் கனரக ஆயுதப் பலம் பற்றிய பீதி ஏற்பட்டது.

ஓயாத அலைகள் 1ம் 2ம் சிங்கள ஊடகங்கள் மத்தியில் புலிகளின் இராணுவ பலம் பற்றிய கருத்துக் களை ஏற்படுத்தினும் இறுதியாய்வில் தமது இராணுவத்தின் அதீத பலம் பற்றிய பிரமிப்பை அவை கொண்டி ருந்தன. இராணுவ சமநிலையில் ஒரு சமநிலை நிலவினும் தமது இராணுவமே வெற்றிபெறும் என அவை நம்பின. புலிகளை ஒரு அரைகுறை மரபு இராணுவமாகவும் அவர்களின் ஆயுத விநியோகப் பாதைகளை அடைத்துவிட்டால் தமது இராணுவத்தால் புலிகளை வெல்ல முடியும் எனவும் சிங்கள உலகம் நம்பியது. ஜெயசுக்குறுய் எதிர்ச்சமர் பற்றிய மதிப்பீடு இருக்கவில்லை. இதே கருத்துக்களையே கொழும்பை மையமாகக் கொண்டு உலக செய்தி நிறுவனங்களுக்கு செய்திகளை அனுப்பும் முகவர்களும் வைத்திருந் தனர்.

ஓயாத அலைகள் 3 இவ் மதிப் பீடுகளை தலைகீழாக்கியுள்ளது. தமிழர்களின் இராணுவ ஆற்றல் விரிந்து வியாபித்து வெற்றிபெறும் அளவுக்குச் சென்றுவிட்டது என்பதை சிங்கள ஊடகங்களும் சர்வதேச ஊடகங்களும் உணர்கின்றன. அமெரிக்காவில் இருந்து வெளிவரும் WALL STREET JOURNAL தனது செய்தியில் அரசினால் புலிகளை வெல்லமுடியுமா என்ற கேள்வி எழுந்துவிட்டது என்கின்றது. டெல்லி யில் இருந்து வெளிவரும் The Hindustan Times செய்திப் பத்திரிகை தனது ஆசிரியர் கருத்துரையில் புலிகளை கொழும்பு குறைத்து மதிப்பிட்டுவிட்டது எனவும் புலிகள் பாராட்டிற்குரிய இராணுவ தந்திர உபாயத்தை கடைப்பிடிக்கின்றார்கள் எனவும் எழுதியுள்ளது.

கொழும்பில் ஊடகங்கள் ஓயாத அலைகள் 3 நடவடிக்கையால் அச்சத்தையும் தமிழர்கள் மீதான வெறுப்பையும் வெளிப்படுத்தினர். The Island ஏடு தேசியத் தலைவரை வன்னியின் கசாப்புக் கடைக்காரன் என மனஎரிச்சலுடன் விபரிக்கின்றது. சிங்கள இராணுவத்தின் ஆக்கிர மிப்பை எமது தேசியத் தலைவர் சிதைத்தமையை பொறுக்கமாட்டாத சிங்கள ஊடகங்கள் தமிழர்களின் வெற்றிக்கு பிரதான பலமாய்நிற்கும் தலைமையை தாக்குகின்றனர். சிங்களப் பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் ஓயாத அலைகள்3 நடவடிக் கையை மையமாகக் கொண்ட விவாதங்களை நடாத்தினர்.

இவ்வாறான விவாதங்களும் விமர் சனங்களும் சிங்களத்தை சிதைக்க முயல்வதைத் தடுக்கவும் சிங்கள பொது அபிப்பிராயத்தை போரை மையமாகக் கொண்ட சந்திரிகாவுக்கு சாதகமாக வைத்திருக்கவும் செய்தித் தணிக்கையை சிங்களம் அமுல்படுத்தி யுள்ளது.

எனினும் சிங்கள - தமிழீழப் போர் சமநிலை மாற்றம் கண்டு தமிழர் களுக்கு பலம் சேர்த்துள்ளது என்ற உண்மை சிங்களம் எங்கும் உணரப் பட்டுவிட்டது.

**நாதன்**

# ஊடகங்களின் பார்வையில்...

## டெக்கான் ஹெரால்ட்

(இந்தியா - 11.11.99)

சிறிலங்கா இராணுவம் இருவருட காலத்தில் கைப்பற்றிய நிலத்தை 72 மணி நேரங்களில் புலிகளிடம் இழந்துவிட்டது. இது ஈழப்போரின் 23 வருடகாலத்தில் ஏற்பட்ட மோசமான இராணுவ தோல்வி. அரசு கடந்த வாரம் 9 கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முகாம்களையும் 1000 திற்கு மேற்பட்ட முன்னரங்கங்களையும் இழந்துள்ளது.

இராணுவ கட்டமைப்பு சிதைந்த தால் படையினர் கட்டளைகளை ஏற்க மறுத்தனர். ஒரு கலக நிலை தோன்றி யது.

புலிகள் தமது இராணுவ நடவடிக் கையை ஆரம்பித்த போது சனதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது தேர்தல் பரப்புரையை ஆரம்பித்திருந்தார். ஆரம்பத்தில் இவை அனைத்தும் அரசியல் நிகழ்ச்சித் திட்டத்துடன் ஆரம்பமாகின. இரண்டு காரணங் களுடன் வாட்டர் செட் 2 நடவடிக்கை ஆரம்பமானது. முதலாவதாக புலிகளிடமிருந்து அரசு மேலும் நிலங்களைப் பறித்து மக்களை தமக்கு வாக்களிக்குமாறு கேட்கும் அல்லது நெருக்கும் நோக்கம். இரண்டாவதாக சிங்களவர்களுக்கு தமது மக்கள் முன்னணி எதிரியுடன் மோதும் சக்தி மிக்கது எனவே இன்னுமொரு ஆட்சிக்காலத்தை அதற்கு வழங்க வேண்டும் எனக் காட்டுவது. ஆனால் இந்த அரசியல் நிகழ்ச்சித் திட்டம் மோசமான இராணுவத் தோல்வியுடன் முடிவடை ந்தது. கடந்த சில நாட்களில் என்ன நடந்தது என்பது பிரிவதற்கான போரில் கருமையான அத்தியாயங் களாகத் திகழும்.

## ஏ.எப்.பி செய்தி நிறுவனம்

(14.11.99)

சிறீலங்கா அரச படைகளுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்திய புலிகள் அதற்கு இணையான தீவிரத்துடன் நாட்டின் வரவு - செலவு நிலையை சேதப்படுத்தியதுடன் அன்னிய நாட்டு மூலதனத்தை அச்சுறுத்தியுள்ளனர்.

மூன்றில் ஒரு பகுதி வருவாயை செலவிடப்படும் பாதுகாப்புச் செல வீனங்கள் அடுத்த வருடத்திற்கான திட்டமிடப்பட்ட செலவீனத்தினுள் திருப்திகரமாக அடங்குகின்றன எனவும் எந்தவித பாரதூரமான பின்விழைவு களும் பற்றாக்குறையில் ஏற்படாது எனவும் ஜெயவர்த்தன ( சிறீலங்கா மத்திய வங்கி ஆளுநர்) அண்மையில் செய்தியாளர்களிடம் சொல்லி யிருந்தார். இது துன்பமுறும் வகையில் பிழையானது என்பது சில நாட்களிலேயே நிருபணமானது. இராணுவம் 19 மாத காலத்தில் கடும் சமர்கள் மூலம் கைப்பற்றப்பட்ட இடங்களை விடுதலைப் புலிகள் ஓயாத அலைகள்3 என்ற நடவடிக்கை மூலம் கைப்பற்றினர். டசின் கணக்கான டாங்கிகள் உள்ளிட்ட வாகனங்கள் உலங்கு வானூர்தி என்பன இழக்கப்பட்டன. தொன் கணக்கான இராணுவ உப கரணங்கள் இழக்கப்பட்டன. அனைத் தும் பல மில்லியன் டொலர் பெறுமதி யானவை. இவை அனைத்தும் மின்னலிடும் நேரத்தில் நடந்தன.

## ரொயிட்டர்

(14.11.99)

இங்கு இரு உணர்வுகள் உள்ளன. அவர்கள் வெளியேறுவதையிட்டு கவலைப்படுகின்றனர். ஆனால் புலிகள் தாக்கப்போகின்றார்கள் என்பதையிட்டு மகிழ்கின்றனர் என்கின்றார் பிதா நவரட்டினம். அவர்கள் தாம் எதிர் கொள்ளும் வசதிகளற்ற நிலையால் உற்சாகமிழக்கின்றனர். ஆனால் விடுதலைபற்றிய உணர்வு வரும் போது மகிழ்வாக உள்ளனர் என்கின் றார்.

( வவுனியாவில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் உணர்வுபற்றியது.)

## தி ஹிந்துஸ்தான் டைம்ஸ்

இந்தியா (12.11.99)

சிறிலங்கா தனது படைகளுக்கு பல விழைவுகளைத் தரும் உலங்குவானூர்திகளையும் பீரங்கிகளையும் டாங்கிகளையும் கொள்வனவு செய்ய வேண்டும் எனகின்றார் திரு.தயன் ஜெயதிலக (செயலாளர் பிரேமதாஸ மையம்). இரு கட்சிகளும் பரம்பரையான அரசியலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சிறிலங்கா தேசத்தின் எல்லைகளை மீள வரைய முயல்கின்றார். என ஜெயதிலக கூறுகின்றார்.

## தி சண்டே டைம்ஸ்

கொழும்பு (14.11.99)

40,000 படையினர் 33 மாதங்களாக போரடிப் பெற்ற வெற்றியை பிரபாகரனால் 72 மணிநேரத்தில் இல்லாததாக்க முடியுமானல் இராணுவ த்தீர்வு சாத்தியமில்லை என்பதை உணரவேண்டும். உணரவில்லை யெனில் தமிழ் மக்கள் வடக்குக் கிழக்கில் தனிநாடு அடையும் காலம் வெகுதொலைவில் இல்லை...

( விக்டர் இவான்)



# தாயகம்: எழுச்சியும் மீட்பும்

மனங்களின் ஒன்றுபட்ட மாற்றம் - ஓரிடத்தில் கருத்தில் குவியப்படுத்தும் வேளை - அது ஏற்படுத்தும் விளைவுகள் வலுவானவை. தேசிய உணர்வு ஒருமித்தெழும்போது அவர்களின் தேசியம் அவர்களிடமே இருக்கும்.

தமிழினம் இன்று தன் தாயகத்தில் ஒருமித்த ஒரு தேசிய எழுச்சியைப் பெற்றுவருகின்றது. தமிழினத்தின் உரிமைகளை மறுக்கின்ற சிறீலங்கா அரசு தமிழர்களை தனித்தீவுகளாக வைத்திருப்பதை ஒரு உபாயமாக கையாண்டு வருகின்றது. இராணுவத்தின் மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் தமிழர், அவ்வாறில்லாத பகுதிகளில் வாழும் தமிழர் என்ற இரு வகைப்படுத்தலை ஏற்படுத்தி இந்த பிரித்தாள்தலை அரசு தொடர்கின்றது.

> சீனா, வியட்னாம், வடகொரியா, கியூபா, தென்னாபிரிக்கா உட்பட விடுதலைப் போர்களை வென்ற உலக நாடுகள் மக்கள் படையின் பங்களிப்புடனேயே வெற்றி பெற்றன.

ஆக்கிரமிப்புவாதிகளான சிங்களவர் படையினராக தமிழர் நிலங்களில் நிலைகொண்டுள்ளனர். அவர்கள் தமக்கு சொந்தமற்ற நிலங்களில் அரசியல்வாதிகளின் செல்வாக்கிற்காக, அதிகாரத்திற்காக நிலைகொண்டுள்ளனர். இது தர்க்க ரீதியாக அவர்களின் ஆக்கிரமிப்புக்காகப் போரிடும் பற்றின் தன்மையை வெளிப்படுத்தும்.

இராணுவப் பகுதிகளில் வாழும் தமிழர்களை இராணுவத்தில் சேர்த்தல் என்ற அரசின் அறிவிப்பு பல நோக்கங்களுக்கானது. இது இராணுவப் பிடியிலுள்ள பகுதிகளில் வாழும் மக்களிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது அல்லது ஏற்படுத்தியிருக்க வேண்டும். யாருடைய நிலத்தில் எதற்காக, யாருக்காக போரிட, தமிழர் இராணுவத்தில் சேரவேண்டும் என்ற தர்க்கத்தை இது தமிழர்களிடம் ஏற்படுத்தியிருக்க வேண்டும். இன்று விடுதலைப்போர் முனைப்புற்ற நிலையில் உள்ளது. நிலங்களை இழத்தல் போராட்டத்தை வலுவிளக்கச் செய்யும் என்ற சிங்கள அரசின் நிலைப்பாடு எதிர்மறை விளைவை உண்டாக்கியிருக்கிறது. இது மக்கள் எழுச்சியை வற்புறுத்தியுள்ளது.

மக்கள் எழுச்சி விடுதலைப் போராட்டங்களின் இலக்கை மிக அண்மையாக்கியுள்ளமை வரலாற்றில் நடந்தவையாகும்.

இத்தகைய எழுச்சி ஒன்று, இன்று தமிழர் தேசத்தில் உருவாகி வருகின்றது. இதற்காக ஏற்கனவே இங்கு மக்கள் எழுச்சி இருக்கவில்லை என்று அர்த்தமல்ல. இப்போது அது உச்சநிலையை எட்டி வருகிறது.

இந்தத் தேசிய எழுச்சி தாயகத்தில் தம் வாழ்வையும் உயிர்களையும் விலையாகக் கொடுக்கும் மக்களிடம் மட்டும் இருந்தால் போதாது. இச்சந்தர்ப்பத்தில் உலகெங்கும் சிதறிவாழும் தமிழர்கள் தம் ஒட்டுமொத்த எழுச்சியையும் கருத்தொற்றுமையையும் காட்டவேண்டும்.

01. உலகம் முழுவதும் தாயகமிழந்து, அந்நியரின் கீழ் அடிபணிந்து, அவர்களிடம் வேலைபார்த்து அங்கும் ஒடுக்குமுறைகட்கு இலக்காகி பாரிய உயிரழிவை சந்தித்த யூதஇனம் இஸ்ரேலை தனக்கான தாயகமாக கட்டியெழுப்ப உழைத்தது உலகெங்கும் வாழும் யூதர்களாகும். உலகப் பொதுவில் இஸ்ரேலுக்காக யூத இனம் நிதி திரட்டி தனது தாயகத்தை இன்று வல்லரசாக கட்டியெழுப்பியிருப்பது ஒட்டுமொத்தமான தேசிய எழுச்சியாலும் உழைப்பாலுமாகவே இருந்தது.

02. 1993இல் 30வருட ஆயுதப்போரின் விளைவாக எதியோப்பியாவிடமிருந்து எரித்திரியா விடுதலை பெற்றது. இந்த விடுதலை உலகெங்கும் வாழ்ந்த எரித்திரியர்களின் உழைப்பால் கிடைத்தது. தாயகத்தில் நிற்போருக்கு நிதிப்பங்களிப்பு என்பதைத்தவிர உலகத்திற்கு ஒட்டுமொத்த தேசிய எழுச்சியை காட்டவேண்டிய தேவையும் ஏற்படும்போது அதனை எரித்திரிய மக்கள் நிரூபித்தனர். இதன்போது உலகெங்கும் எரித்திரியர்கள் தமக்கு தாயகம் வேண்டும் என்ற கருத்து வாக்கெடுப்பில் வாக்களித்தனர்.

03. அரபுப் பிரதேசத்தில் நான்கு நாடுகளால் பிரிக்கப்பட்டுள்ளது குர்தீஸ் மக்களின் தாயகம். துருக்கியின் பிடியில் இருக்கும் குர்தீஸ் மக்களின் விடுதலைக்கான இயக்கம் பி.கே.கே இதன் தலைவர் அப்துல்லா ஒக்கலான் அண்மையில் துருக்கிய அரசால் கைது செய்யப்பட்டார். இதன்போது உலகெங்கும் வாழும் குர்தீஸ் மக்கள் தாம் வாழும் நாடுகளில் தலைவர் ஒக்கலானை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டம் புரிந்தனர். ஆர்ப்பாட்டம் அந்த அரசின் உடமைகளை அழிக்கும் வன்முறைகளாகவும் மாறின. துணிச்சலாக குர்தீஸ் மக்கள் தம் தலைமைக்கான எழுச்சியை அங்கு உணர்வு பூர்வமாக காட்டினர். இது தாயகம் மீதான அபரீதமான பற்றின் வெளிப்பாடு. குர்தீஸ் மக்கள் தம் உத்தேச அரசுக்கான பாராளுமன்றைக் கூட நெதர்லாந்தில் அமைத்துள்ளனர்.

**-தி.தவபாலன்-**

04. வியட்னாம் கெரில்லாக்களின் பாரிய தாக்குதலான தீன்பீன்பூ படைத்தள அழிப்பில், பனியும் இலையுதிர்காலமுமான அந்தக் காலத்தில் அனைத்து மக்களும் - ஒவ்வொரு வியட்னாமியனும் தேசப்பற்றுடன் "எல்லோரும் முன்னணிக்கு எல்லாமே வெற்றிக்கு" என்ற கோசத்துடன் ஒரு மனிதனுக்கு அப்பாற்பட்ட பணியைச் செய்தனர்.

"எங்களுடைய நீண்டகால விடுதலைப் போரிலே மக்களின் மிகப்பெரிய பங்களிப்பு 1953- 54 ஆம் ஆண்டுகளில் இருந்து எதிரிக்கு எதிராக போரிடும் எமது இராணுவத்துக்கு, சகல வழங்கல் பணிகளையும் அவர்கள் செய்தனர். தீன்பீன்பூ தள பிரதான முன்னணி நிலைப்பகுதிக்கு பின்னரங்கப் பகுதியிலிருந்து 400 மைல்கள் தூரம் கடந்து போராளிகளுக்கு உணவையும், வெடி பொருட்களையும் கொண்டு வந்து தந்தார்கள் அவர்கள். ஒழுங்காக வீதிகள் இல்லை. போக்குவரவுக்கு நல்ல வாகனங்கள் இல்லை. வழங்கல் பாதையை எந்நேரமும் எதிரி தாக்கும் அச்சம், பொழியும் பெருமழை இவற்றுக்கு மத்தியில் எமது மக்கள் அப்பணியை சிறப்பாக செய்தார்கள். தீன்பீன்பூ சண்டையில் போருபாயத்தில் மிக முக்கியமானது இந்த வழங்கல்தான். உண்மையில் இது எங்களது சக்திக்கு மேலானதுதான். மக்களின் இப்பணியே எதிரியை தோற்கடித்தது. அது எவரையும் தோற்கடிக்கும். வாகனங்களை ஓட்டுபவர்கள், நீரோடைகள், மலைகள், காடுகளைக் கடந்து தூக்கத்தைத் தொலைத்து போராளிகளுக்கானவற்றை நேரடியாக வழங்கினர். ஒவ்வொரு குழுத்தலைமையுடனும் மக்கள் படை நேரடியாக தொடர்பு கொண்டு வழங்கலைப் புரிந்தது. நகர்களிலிருந்து ஆயிரக்கணக்கான சைக்கிள்கள் 400 மைல்களை கடந்து போர்முனைக்கு பொருட்களை அனுப்பின. தோளில் மூங்கில்தடி துலாக்கள் மூலம் மக்கள் பொருட்களைக் கொண்டு சென்றனர். போரின்போது எதிரியின் குண்டுகளுக்கு மத்தியில் மக்கள்படை சமையல், மருத்துவப் பணி, போக்குவரத்து போன்ற சகல பணிகளையும் செய்தது"

> 'மஸாடா இனி என்றும் விளாது" என ஒவ்வொரு யூதனும் மஸாடா சென்று உறுதி எடுத்துக் கொள்வது இஸ்ரேலின் வழமை.

***"மக்கள் போரின் இராணுவக்கலை" வியட்னாம் விடுதலை அமைப்பின் இராணுவ தளபதி ஜெனரல் கியாப்***

லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த நிக்கரகுவா விடுதலைப் போராட்டம் மக்கள் எழுச்சிக்கு சிறந்த உதாரணம். சன்டினிஸ்டா போராளிகள் விடுதலைப்போரை உச்ச நிலைக்கு கொண்டுவந்தபோது இருந்த மக்கள் படையே வெற்றி இலக்கை விரைந்து எட்ட உதவியது.

சீனா, வியட்னாம், வடகொரியா, கியூபா, தென்னாபிரிக்கா உட்பட விடுதலைப் போர்களை வென்ற உலக நாடுகள் மக்கள் படையின் பங்களிப்புடனேயே வெற்றி பெற்றன.

மக்கள் எழுச்சி இந்த தேசங்களின் உயர் நிலைக்கு வந்தமைக்கு அந்த மக்களிடையே ஒட்டு மொத்தமாக ஏற்பட்ட தேசிய உணர்வே காரணமாகும். சீனாவில் மாவோ, கொம்யூனிஸ புரட்சியை முன்னெடுத்தபோது அங்கு பெரும்பான்மையாக இருந்த மக்களிடம் நீ ஒரு சீனன் என்ற தேசிய கருத்துருவை வளர்த்ததன் மூலமே மக்கள் எழுச்சியை ஏற்படுத்தினார்.

அந்த வகையான 'தமிழர்' என்ற தேசிய உணர்வு, தமிழரிடம் இருக்கின்றது. ஆனால், அதனை சிதைப்பதில் சிறீலங்கா அரசு கல்வியை ஒரு பிரதான ஆயுதமாக பயன்படுத்துகின்றது.

சிறீலங்காவின் கல்வி, சிங்களத் தேசியத்தை சிங்கள தேசத்தை அதன் பண்பாடு புவியியல் நிலைகளை சித்தரிப்பது, அதனையே தமிழரிடம் திணிக்கின்றது. தமிழர் தம் சுயத்தை, தம் சூழலை, தம் வளத்தை அறியவோ வளப்படுத்தவோ விடாமல் கல்வியை சிங்கள தேசியத்தை மையப்படுத்தியதாக சிறீலங்கா அரசு அமைத்துள்ளது. இக்கல்வி எமக்கான சுயசார்புத் தன்மையை வளர்க்க அனுமதிக்கவில்லை. பதிலாக அரசை மையமாக கொண்ட இந்த இலக்கை எட்டுவதே ஒவ்வொரு தமிழனின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பது அரசின் நோக்கம். இதன் மூலம் உத்தியோகம் அரசுக்கான விசுவாசத்தை வளர்க்க உதவுகின்றது. நில ஆக்கிரமிப்புடன் இதனையும் கருத்தில் வைத்து யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து தமிழர்களை தம் படையினரின் பிரதேசத்துள் உள்வாங்கி அவர்களின் நோக்கினை திசை திருப்புவதில் அரசு முனைப்போடு செயற்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் வன்னியிலும் மக்களோடு இரணைஇலுப்பைக்குளம், மடு, மூன்றுமுறிப்பு போன்ற பகுதிகளை மக்களுடன் சிறீலங்கா இராணுவம் வளைத்துப் பிடித்துக் கொண்டது.

இந்தக் கட்டத்தில் இராணுவத்தினரின் மூலமாக சிங்கள அரசு மேற்கொள்ளும் இத் தந்திரோபாயத்தை உடைக்க வேண்டிய ஒட்டுமொத்த தேவை தமிழினத்துக்கு எழுந்துள்ளது. தமிழ் மக்களை கையகப் படுத்திய யாழ் குடாநாட்டில் இராணுவத்தின் உண்மை முகம் வெளிப்பட்டு விட்டது. இது இனிமேல் ஆக்கிரமிக்கப்பட்ட பிற பகுதிகளில் தொடரும்.

இதனால் ஆக்கிரமிக்கப்படாத பகுதிகளில் இருப்போர் அப்பகுதியை தக்க வைப்பதும் ஆக்கிரமிக்கப்பட்டவற்றை மீட்பதும் தமிழீழ மக்களின் உயிர்க்கடமையாகின்றது.

இதனை செய்யப்போகின்ற பெரும் பொறுப்பு கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்களுக்கானது. இதிலிருந்து வழுவுவது தமிழருக்குரிய காரியமாக இருக்காது.

அதேபோல் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கும் தேசியக் கடமை இருக்கின்றது. தமிழருக்கு நாடு அமைய அவர்கள் தம் தேசிய உணர்வை மறக்கக் கூடாது.

இன்று உலகெங்கும் தமிழர் சிதறி வாழ்கின்றனர். உலகம் முழுவதும் தமிழர் வாழ்கின்றனர் என்பது பெருமைக்குரிய விடயமாக இருக்காது. 2ஆம் உலகப் போர் வரை உலகெங்கும் சிதறி வாழ்ந்த யூத இனம் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் உயர்ந்து நின்றபோதும் தமக்கு என்று ஒரு தாயகம் இல்லாது ஏனைய நாடுகளில் அடிமையாக வாழ்வது அவர்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# இராணுவ கட்டமைப்பு சிதைப்பு

சிறீலங்காவின் இராணுவ கட்டமைப்பையே சிதைக்கும் அளவுக்கு வன்னிக்களத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மாபெரும் வெற்றிகளை ஈட்டி நிற்கின்றனர். வரலாற்றின் திருப்பு முனை என வர்ணிக்கப்படும் இவ் வெற்றிகள் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு



பிரபாகரன் அவர்களின் நேரடி வழி நடத்தலில் இம்மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகி தொடர்ந்து வரும் ஓயாத அலைகள் - 3 இன் மூலம் எய்தப்பட்டு வருகின்றன. சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தனது தமிழீழ ஆக்கிரமிப்புக்களை சிங்கள பௌத்த பேரினவாதத்தின் வெற்றிகளாகக் காட்டி ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் ஒரு முறை வெற்றிவாகை சூடலாம் எனப் பகற்கனவு கண்டு சிறீலங்காவின் ஜனாதிபதி தேர்தலுக்கு தேதி நிர்ணயித்துள்ள நேரத்தில் ஆரம்பமான ஓயாத அலைகள் - 3 வன்னிப் பெருநிலப்பரப்பில் நிறுத்தப்பட்டிருந்த 25000 இற்கும் மேற்பட்ட சிறீலங்காப் படைகளை அள்ளிச் சென்று வன்னிப்பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகளை பூரணமாக விடுவித்துள்ளது.

வன்னிக்களம் என்பது சிறீலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரை அதனது அரசியல் இராணுவ நடவடிக்கைகள் அனைத்துக்கும் மையக்களமாகத் திகழ்ந்தது. தமிழீழ மக்களின் தாயகத்தின் புவியியல் தொடர்புகளைத் துண்டிப்பதற்கும் குடியேற்றங்கள் வாயிலான சிங்களமயமாக்கலின் மூலம் தமிழீழத்தின் மக்கள் தொகை அமைப்பினை சிதைப்பதற்குமான அரசியல் நோக்கினை வன்னி ஆக்கிரமிப்பின் மூலம் சந்திரிகா அரசாங்கம் முன்னெடுத்து வந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பிரதேசமாக இருந்துவரும் முல்லைத்தீவினைக் கைப்பற்றி அல்லது முற்றுகையிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ ஆற்றல்களை அழிப்பதன் மூலம் தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்பு வலிமையை அழித்து ஒழித்து தமிழ் மக்களை அடிமைப் படுத்தலாம் என்ற நப்பாசையுடன் ஆரம்பிக்கப்பட்டதுதான் வெற்றி நிச்சயம் என்ற பெயரில் தொடங்கப்பட்ட வன்னிப் பெருநிலப்பரப்பு மீதான இராணுவத் தொடர் நடவடிக்கைகள்.

இந்த இராணுவத் தொடர் நடவடிக்கைகள் படுதோல்வி கண்ட நிலையிலும் சிங்கள பௌத்த பேரினவாத வெறியுடன் ரணகோஸ என்றும் நீர்சிந்தும் நடவடிக்கை என்றும் பலவித இராணுவக் குறியீடுகளுடன் வன்னிப் பெருநிலப்பரப்பில் தனது ஆக்கிரமிப்புக் கால்களை அகலப் பதிக்க முயன்று வந்தது. இந்த எல்லா விதமான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்துள்ள ஓயாத அலைகள் - 3 தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவத் தீர்வு மூலம் வெல்லமுடியாது என்ற உண்மையை உலகிற்கு தெளிவாக நிரூபித்து நிற்கிறது.

மிகக்குறைந்த அளவான இழப்புக்களுடன் எதிரிக்கு என்றுமே இல்லாத அளவுக்கு பாரிய இராணுவ இழப்புக்களை ஏற்படுத்தியுள்ள ஓயாத அலைகள்-3 சிங்கள அரசியல் தலைமைகளுக்கு இராணுவத் தீர்வினால் தமிழர் பிரச்சினையை என்றுமே தீர்க்க இயலாது என்ற பாடத்தைப் புகட்டியுள்ளது. சிறீலங்காவின் 55வது 56வது கட்டளைத் தலைமை முகாம்கள் உட்பட பத்துக்கு மேற்பட்ட இராணுவ முகாம்களை வன்னி மண்ணில் வீழ்த்தி தொடர்ந்தும் வவுனியாவை விடுவிக்க முன்னேறுவதும் மணலாற்றில் பத்துக்கும் மேற்பட்ட முகாம்களையும் பதினைந்துக்கும் மேற்பட்ட மினி முகாங்களையும் வீழ்த்தி முன்னேறுவதும் மூன்றாம் முனையில் ரணகோஸவால் சிறீலங்கா ஆக்கிரமித்த பிரதேசங்களை மீட்க பாலம்பிட்டி பகுதியில் நடாத்தி வரும் வெஞ்சமரும் சர்வதேச இராணுவ ஆய்வாளர்களிடை விடுதலைப் புலிகள் மரபுவழி இராணுவமாக உள்ளனர் என்ற கருத்தை வலுப்படுத்தியுள்ளது. இதனால் சந்திரிகா தான் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழித்து விட்டதாக போலிப்பரப்புரைகள் செய்தவேளை அவருக்கு உதவிகள் அளிப்பதன் மூலம் இலங்கைத்தீவில் அமைதியினை தோற்றுவிக்கலாம் என நினைத்து செயற்பட்டு வந்த சர்வதேச நாடுகள், அமைப்புக்கள்கூட தற்பொழுது தங்கள் பார்வையில் உள்ள கோணல்களை விளங்கி அவற்றை சரிசெய்யக் கூடிய வகையில் செயற்படத் தொடங்கியுள்ளன.

சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளுடன் போராடும் மனோநிலை வலிமையை இழந்து பின்வாங்கி ஓடும் தன்மையையும் பெருமளவில் உயிர் உடல் இழப்புக்களுக்கு ஆளாவதையும் கண்ட சிறீலங்காவின் எதிர்க்கட்சியினர் தாம் பதவிக்கு வந்தால் இராணுவத் தீர்வு வழிகளைநாடாது விடுதலைப் புலிகளிடம் வடக்கு கிழக்கின் நிர்வாகத்தை இரண்டு ஆண்டுகளுக்கு கொடுத்து, மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்தினூடனான பேச்சு வார்த்தை மூலமே பிரச்சினையை தீர்க்க முயற்சிப்போம் என பகிரங்கமாக கூறியுள்ளனர். ஆயினும் சந்திரிகாவும் இதே போன்றே முன்னர் பல வாக்குறுதிகள் வழங்கி ஆட்சிக்கு வந்தார் என்பதும் பின்னர் தமிழ் மக்களை முன்னைய அரசாங்கங்களைவிட மிக அதிக அளவில் பலவழிகளில் இனஅழிப்பு செய்து வருகின்றார் என்பதும் உலகறிந்த உண்மை.

தமிழீழ தகவல் செய்தி துறையினரின் அபார வளர்ச்சி சிறீலங்காவின் எல்லா விதமான செய்தி தணிக்கைகளையும் மீறி தமிழீழ மக்களின் உண்மைச் செய்திகளை உலகறிய வைப்பதினால் சிறீலங்கா தகவல் பரிமாற்றத்தை தடுத்து செய்துவந்த ஆக்கிரமிப்புக்களும் விடுதலைப் புலிகளால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டு வருகின்றன. இதனால் இன்று உலகின் தகவல் தொடர்பு சாதனங்கள் தமிழீழம் குறித்த உண்மை செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டு வருகின்றன. இதனால் ஓயாத அலைகள்-3இன் வெற்றிகள் உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவி சர்வதேச இராணுவ ஆய்வாளர்களை வியக்க வைத்துள்ளது. தமிழீழ மக்களுக்கு தமது இறைமையையும் தன்னாதிக்கத்தையும் பாதுகாக்கும் ஆற்றல் நிறைய உண்டு என்ற உண்மையை உணரும் உலகு, இனியும் இப்பிரச்சினையை சிறீலங்கா சொல்வதுபோல் உள்நாட்டு பிரச்சினையாகப் பார்க்கமாட்டார்கள் என்பதை சர்வதேச மட்டத்தில் ஏற்படத் தொடங்கியுள்ள மாற்றங்கள் உறுதி செய்கின்றன.

இந்த மகத்தான வரலாற்று திருப்பு முனைக்கு ஓயாத அலைகள்-3 மூலம் வழிகாட்டி வெற்றிவாகை சூடி நிற்கும் தேசத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கும் அவரது ஆற்றல்மிகு தளபதிகள், வீரமும் தியாகமும் நிறை போராளிகள், உறுதியும் உழைப்பும் நிறை மக்கள் அனைவருக்கும் அனைத்து புலம்பெயர் தமிழர்களும் தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றனர். எங்கள் தேசத்தின் விடுதலைக்காகவும் எங்களதும் எங்கள் குழந்தைகளதும் சுதந்திரமான வாழ்வுக்காகவும் தங்கள் இன்னுயிர்களை ஈந்துவிட்ட அனைத்து மாவீரர்களுக்கும் புலம்பெயர் தமிழீழ மக்கள் வீரவணக்கங்கள் செலுத்தி அவர்கள் ஏந்திய விடுதலைத் தீபத்தை முன்னெடுத்துச் செல்ல தங்கள் உழைப்பை, நிதிவளத்தை, மதியுகத்தை பகிர உறுதிபூண்டு நிற்கின்றனர்.

**—கரன்—**

(6–ம் பக்கத் தொடர்ச்சி)

### தாயகம்: எழுச்சியும் மீட்பும்

களை பாதித்தது. தமக்கென ஒரு நாடு வேண்டும் என்பதை அவர்கள் பெருமைக்குரிய விடயமாக கருதினர். அதற்காக உழைத்தனர். அதேபோல் இன்று சிறீலங்கா அரசின் ஆதிக்கமே தமிழர்களை சிதறடித்து "அகதிகள்" என்ற பெயரில் சுயமானமிழந்து வாழவைக்கின்றது. இது நிரந்தரமானதல்ல. நிரந்தரமாக இருக்கவும் கூடாது. அதனால் அவர்களும் தாயகத்துக்கான உழைப்பை அதிகரிக்க வேண்டும்.

வியட்னாமியர்களைப்போல யூதர்களைப்போல குர்தீஸ்களைப்போல ஒவ்வொரு ஈழத்தமிழரும் தன் தாயக உருவாக்கத்திற்கு எந்தவகையிலாவது உழைக்க வேண்டிய தருணம் இது.

யூதர்களுக்கு மஸாடாவைப்போல தமிழீழ மக்களுக்கு வன்னி.

***"மஸாடா இனி என்றும் விளாது" என ஒவ்வொரு யூதனும் மஸாடா சென்று உறுதி எடுத்துக் கொள்வது இஸ்ரேலின் வழமை.***

அதே போல தமிழீழத்தின் ஒவ்வொரு பிரஜையும் உறுதி எடுக்க வேண்டிய நிலை.

காலதாமதம் இன அழிவை மிக மோசமாக்கிவிடும். எந்த வகையிலும் தமிழீழத்தின் ஒவ்வொரு மகனும் எங்கிருந்தாலும் தாயகத்தை தக்கவைக்க வேண்டும்.

இன்று தாயகத்தில் தமிழ்த்தேசிய எழுச்சி உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், ஒட்டு மொத்த தமிழினமும் பல்வேறு மாற்றங்களை தமது இயல்புப் போக்கில் மாற்ற வேண்டிய தேவைகள் ஏற்பட்டுள்ளன.

## புதிய வெளியீடுகள்



புலிகள் ஓய்வதில்லை
பாடல்கள்: உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன்
இசை, பாடியவர்: தேனிசை செல்லப்பா
வெளியீடு: அனைத்துலகச்செயலகம் தமிழீழ விடுதலைப் புலிகள்.



போர்ப்பறை
பாடல்கள்: முல்லைச்செல்வன்
இசை: தமிழீழ இசைக்குழு
வெளியீடு: கொள்கை முன்னெடுப்புப் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள்.




வானுயரும் புலி வீரம்....
வெளியீடு: கலை பண்பாட்டுக் கழகம், தமிழீழ விடுதலைப் புலிகள் (இத்தாலிப் பணியகம்)



தேசத்தின் புயல்கள் பாகம்: 2
உருவாக்கம்: தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம்
இசை: தமிழீழ இசைக்குழு, சிறிகுகன், யாழ்மாறன்
வெளியீடு: இம்ரான் பாண்டியன் படையணி.

நெருப்பில் நீராடுவோம்
பாடல்கள்: உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன்
இசை, பாடியவர்: தேனிசை செல்லப்பா
வெளியீடு: அனைத்துலகச்செயலகம் தமிழீழ விடுதலைப் புலிகள்.

அனைத்து நாடுகளிலும் மாவீரர்நாள் நிகழ்வு மண்டபங்களில் பெற்றுக்கொள்ளலாம்



# மேஜர் டினேஸ்

இருபக்கங்களாலும் நீரினால் சூழப்பட்டு இயற்கை அழகுடன் செல்வங்கள் கொளித்து நிற்கும் மீன் பாடும் தேன்நாடாம் மட்டுநகரின் அங்கங்களாக கிளைபரப்பிக்கிடக்கும் கிராமங்களில் ஒன்றுதான் புதுக்குடியிருப்பு. இங்கேதான் 1969ஆம் ஆண்டு மாசி மாதம் 15ஆம் திகதி சின்னத்தம்பி அழகம்மா தம்பதியினர்க்கு 6ஆவது பிள்ளையாக ஜெயகரன் உதயமானான். இவன் சிறுபிள்ளையாக இருக்கும்போதே தாயார் நோய்வாய்ப்பட்டிருந்ததால் இவனது உடன்பிறந்த தமக்கையர்தான் இவனை வளர்த்தெடுத்தாள். இவனுக்கு 5வயது நிரம்பியதும் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயத்தில் கல்வி கற்பதற்காக சேர்க்கப்பட்ட இவன் ஆரம்பத்தில் இருந்தே ஆர்வத்துடன் கல்வி பயின்றான். கல்விக்கூடத்தில் சொல்லிக்கொடுக்கும் பாடங்களை வீட்டில் படிப்பதற்கு தோட்டம் செய்வதற்கு விளையாட்டிற்கென நேரங்கள் பிரித்து சின்ன வயதில் இருந்தே திட்டம் வகுத்து தனது காலங்களை கழித்துவந்தான்.

இவன் கல்விக்கூடத்தில் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் தொடக்கம் படிக்கும் மாணவர் வரை எல்லோரையும் பகிடிவிட்டு சிரிப்பில் ஆழ்த்திவிடுவான். இவனது படிப்பறை எப்போதுமே கலகலப்பாகத்தான் இருக்கும் கல்விப்பொதுத்தர சாதாரணதரம் வரை பயின்ற இவன் பாடசாலையில் வருடம் தோறும் நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டியில் இல்லத்தலைவனாகநின்று எல்லோருக்கும் விளையாட்டுப் பயிற்சி கொடுப்பதோடு தானும் தனக்கு விருப்பமான மூன்று விளையாட்டை தேர்ந்தெடுத்து பயிற்சிகள் பெறுவான். தனது இல்லம் வெற்றி பெற பயிற்சிக்கான நேரத்தை வீணாக்காது முழுமூச்சாக நின்று முழுவதையுமே கவனித்துக் கொள்வான்.

இவனது பாடசாலையில் இயங்கிய சாரணர் இயக்கத்தில் இணைந்திருந்த இவன் ஒரு அணிக்குத் தலைவனாகவும் இருந்தான். ஓய்வு நேரங்களில் நெசவுத் தொழிலையும் செய்து பணத்தைப் பெற்று பாடசாலைச் செலவுக்காக பயன்படுத்தினான். 1986ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தர சாதாரணதர பரீட்சையில் தோற்றி எல்லாப்பாடங்களிலும் கணிசமான பெறுபேறுகளைப் பெற்ற இவன் உயர்தரப் படிப்பிற்காக மட்டுநகர் மத்திய கல்லூரியில் இணைந்து படிப்பைத் தொடர்ந்தான்.

1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கில் எமது இயக்கம் அமைப்புக்களை உருவாக்கத் தொடங்கிய காலமது அந்நேரம் இயக்கத்திற்காகவும் சேவை செய்யத் துணிந்தான். போராளிகளுக்கு வீடு வீடாகச் சென்று உணவு பணம் சேகரிப்பது துண்டுப்பிரசுரங்களை ஒட்டுவது போன்ற வேலைகளையும் செய்தான். அத்தோடு இவனுக்கு ஒரு சில ஆயுதப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இவ்வளவோடு படிப்பதையும் நிறுத்திவிடவில்லை எல்லாமே அவனுக்கு முக்கியமானதாக தென்பட்டதால் ஒன்றையும் நிறுத்திவிடவில்லை. இந்திய இராணுவத்தின் நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில்கூட மறைமுகமாகத் தன்னாலான உதவிகளை செய்துகொண்டே இருந்தான்.

1983ஆம் ஆண்டு யூலைக்குப் பின் தமிழீழத்தில் எல்லாப் பகுதிகளிலும் சிங்களஅரசும் படைகளும் தமிழ் மக்களுக்கு இழைத்து வந்த கொடுமைகள் அனைத்தையும் இவன் கண்ணால் பார்த்தபோதும் காதால் கேட்டபோதும் துடி துடித்துப் போவான். இதுபோன்ற சம்பவங்கள்தான் இவனை போராடத்தூண்டிக் கொண்டிருந்தது.



1990ஆம் ஆண்டில் இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கியபோது சிங்கள இராணுவத்தால் எம் மக்கள் மேலும் மோசமான பல வழிகளிலும் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர். இச்சம்பவம் மேலும் அவனுக்கு படையினர்மீது வெறுப்பை ஊட்டியது. சிந்திக்கச்செய்தது. எல்லா வழிகளிலும் சிந்தித்து இவன் ஆயுத மேந்திப் போராடினால்தான் எமது மக்களை அடிமையில் இருந்து விடிவிக்க முடியும் என்ற முடிவிற்கு வந்தான். அவனோடு படித்த பலரை ஒன்று சேர்த்து தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் இணைத்துக் கொண்டான். தமிழீழத்தின் இதயமாக விளங்கிய மணலாற்றுப் பகுதிக்கு நூற்றுக் கணக்காக அனுப்பப்பட்ட போராளிகளில் இவனும் ஒருவனாக வந்தான். மணலாற்றில் 11வது பயிற்சிப்பாசறையில் பயிற்சி பெற்ற இவன் டினேஸ் என்ற பெயருடன் புலிவீரனானான்.

இவனை தளபதி லெப் கேணல். அன்பு அண்ணா 81எம்.எம் என்னும் மோட்டார் பயிற்சிக்கு தெரிவு செய்தார். இவன் திறமைமிக்கவன் என்பதால் மோட்டாரைப் பற்றி இலகுவாக குறுகியகாலத்தில் கற்றுக்கொண்டு இவனுக்கு கற்றுக் கொடுத்தவரையும் மிஞ்சிவிட்டான். இதனால் மணலாற்றில் இருந்த எல்லாவகை மோட்டார்களுக்கும் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். இவன் மணலாற்றில் நடைபெற்ற எல்லா இராணுவ நடவடிக்கையிலும் எம்மால் திட்டமிட்டு நடாத்தப்பட்ட பெரிய நடவடிக்கையிலும் மோட்டரை பயன்படுத்தி இராணுவத்தினருக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியதோடு வெற்றியையும் பெற்றுத் தந்துள்ளான்.

கஜபால இராணுவ நடவடிக்கையில் முன்னேறி வந்த பவள் கவசவாகனங்கள் மீதும் குறி தவறாது செல்களை வீழ்த்தி எதிரியை நிலைகுலையச் செய்து பெரும் பாராட்டுக்களையும் பெற்றான். இவன் தளபதியாய் மேலதிக படிப்பிற்காக அனுப்பப்பட்டு அங்கேயும் இரண்டு ஆண்டுகள் படித்து வந்தான். அது இவனுக்கு மேலும் அறிவை ஊட்டியது.

இவன் காட்டில் இருந்த எமது முகாம்களை எங்கெங்கு உள்ளது என்று அதன் அமைவிடங்களை அளந்து வரைபடமாக வரைந்தான். காட்டைச் சுற்றியிருந்த இராணுவ முகாம்களையும் திசைகாட்டியின் உதவியுடன் அளந்து வரைபடமாக்கினான். மோட்டார் அணிகளுக்கு பயிற்சி கொடுப்பதிலிருந்து எல்லாமே இவன்தான் கவனித்தான்.

பூநகரிச்சமர்தான் இவனுக்கு மோட்டாருடன் சென்ற கடைசிச்சமராகும் பின்பு மணலாற்றில் சிறப்பு மிக்க சமரென வர்ணிக்கப்படும் ஐந்து பாரிய இராணுவ முகாம் தாக்குதலுக்கு முன்னர் டினேஸ்தான் ஒன்றரை ஆண்டுகள் நூற்றுக்கு மேற்பட்ட வேவுப் போராளிகளுக்கு பொறுப்பாக இருந்து அந்த ஐந்து இராணுவ முகாங்களில் தரவுகளை தாக்குதல் திட்டத்திற்கு அமைய ஒரு சிறுகுறையுமில்லாது பெற்றுக் கொடுத்தான்..

அந்த ஒன்றரை ஆண்டுக் காலத்திற்குள் அவன் பட்ட கஸ்ரங்கள் வேதனைகள் எழுத்தில் பார்க்கமுடியாது. இதன் பின் மணலாறு மாவட்ட சிறப்பு கோட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட இவன் வெலி ஓயாப்பகுதியில் அமைந்திருந்த கென்பாம் இராணுவமுகாமுக்கான வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வேவு பூர்த்தியாகிக் கொண்டிருந்த வேளையில் எதிரி தாக்கியதில் காயமடைந்தான்.

இதன் பின் 1995-05-28 அன்று முல்லை மாவட்ட துணைத்தளபதியாக நியமிக்கப்பட்டான். இவன் தனது வேலைகளை பொறுப்பெடுத்து தனது கடமைகளில் இருந்து தவறாது முழுமூச்சாக உழைத்தான். இவன் போராளிகளுடன் அன்பாகப் பழகினான். ஒரு போராளியைக்கூட கடினமான வார்த்தைகளால் பேசவும் மாட்டான் போராளிகள் எவ்வளவு பெரிய தவறை இழைத்தால்க்கூட அடிக்கவோ பேசவோ எண்ணமாட்டான் அவர்களைக் கூப்பிட்டு சொல்லாலே திருத்தி விடுவான் இதனால் இவன்மேல் போராளிகள் நம்பிக்கையும் பாசத்தையும் அளவு கடந்து வைத்திருந்தார்கள்.

பின்பு காட்டில் இராணுவக் கொமாண்டோக்களின் நடவடிக்கை கூடுதலாக இருந்தது இதை முறியடிக்க வேண்டும் என்று அரும்பாடுபட்டான் தினேஸ் அவனது படையணியைக் கொண்டு காட்டில் தேடுதல் நடவடிக்கைகளை நடாத்தினான். ஒரு நாள் அவனது முயற்சி பயனளித்தது கொமாண்டோ படையை இவனது அணி சந்தித்து பெரும் சண்டை காட்டில் நடந்தது. இதில் எதிரிக்கு பேரிழப்பை கொடுத்ததோடு இவனும் காயமடைந்து தனது கை ஒன்றின் சுய இயக்கத்தை இழந்தான்.

இதைத்தொடர்ந்து யாழ்க்குடாநாட்டின் மீது பெரியதொரு படையெடுப்பை நடாத்தினான் எதிரி. யாழ்ப்பாணத்தை தக்க வைக்க எமது போராளிகள் பெரும்பாடு பட்டுக்கொண்டிருந்த இறுதி நேரத்தில் இவனது படையணியும் அங்கு சென்று அப்பெரும் சமரில் பங்குகொண்டு சாதனையை நிலைநாட்டியது.

யாழ்ப்பாணத்திலிருந்து மணலாற்றுக்குத் திரும்பிய இவன் நெடுங்கேணியில் எதிரியின் நடவடிக்கை கூடுதலாக இருந்ததால் எதிரியின் நடவடிக்கையை குறைக்க எதிரியின் பிரதேசத்தில் எமது தாக்குதல்களை கூட்டவேண்டும் என நினைத்தான். வேவுக்கு புறப்பட்டான் அவன். இயலாத கையோடும் ஓய்வாக இருக்கவில்லை தானும் ஒருவனாகவே சென்றான். குறிப்பிட்ட காலத்திற்குள் மிக வேகமாக பதவியாவிலும், பராக்கிரமபுரத்திலும், அரியகுண்டானிலும் மூன்று இலக்குகளை தேடிஎடுத்துவிட்டு திரும்பி வந்தான்.

## கணப்பொழுது

சண்டைக்கான பயிற்சியையும் தானே முன் நின்று வழங்கி இரண்டு சண்டையை வெற்றியோடு நடாத்தியபின் இரண்டாவது சண்டை நடந்து முடிந்த மூன்றாம் நாளான 27-02-96 அன்று அதிகாலை 05.50இற்கு அரியகுண்டான் பகுதியில் அமைந்திருந்த மினிமுகாம்மீது தாக்குதலை மேற்கொண்டு பதினெட்டுப் படையினரைக் கொன்று ஆயுத தளபாடங்களையும் எடுத்துக் கொண்டு வெற்றியோடு திரும்பிய அதே சமயம் எங்கோ இருந்து வந்த எதிரியின் குண்டொன்று நெற்றியில் பட்டது. அவன் நேசித்த அந்த நெடுங்கேணி மண்ணில் ஆறாக பெருக்கெடுத்த குருதியால் அவனது உள்ளத்துக்கனவுகள் எழுதப்பட்டன. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த இவன் ஆறாம் நாளான 03-03-96 அன்று இராப்பொழுதில் அவனது இலட்சிய சுமைகளை தந்திட்ட அக்கணப்பொழுதினில் மாவீரர் எனும் பெரும் வரிசையில் சேர்ந்துவிட்டான்.

தியாக உள்ளம் கொண்ட இலட்சியத் தளபதியே நீ நடந்த இலட்சியப்பாதையின் விளிம்பில் நாம் நிற்கின்றோம். உனது இலட்சியம் காணும் வரை எங்களது பயணம் உனது இலட்சியம் வெற்றிப் பாதையில் தொடரும் இது உறுதி!

–எழுதியவர் போராளி ஜெனா –

# நரகத்துழலுவதோ...

—சாம்பவி—



*'தந்தையை இழந்த மகளாய் உங்களைப் போன்று நானும் அழுகின்றேன்.'*

*'கணவனை இழந்த மனைவியாய் உங்களைப் போன்று நானும் கலங்கு கின்றேன்.'*

*'குழந்தைகளின் நலம் கருதும் தாயாய் உங்களைப் போன்று நானும் வருந்து கின்றேன்.'*

ஆட்சிபீடம் ஏறுவதற்கு முற்பட்ட காலங்களில் சந்திரிகா அம்மையாரின் திருவாய் மலர்ந்தருளியவைதான் இப் பொன்மொழிகள். ஆட்சிபீடம் ஏறிய ஒரு மகளின் அழுகையை, ஒரு மனைவியின் கலக்கத்தை, ஒரு தாயின் வேதனையை எந்தளவுக்கு அவரால் புரிந்திருக்க முடிந்தது. இக் கேள்விக்கு முடிவில்லாத துயர் சுமக்கும் பெண்கள்தான் பதிலாகியுள்ளார்கள். ஒரு நாட்டின் தலைவி என்ற நிலையில் இருந்து கொண்டு பெண்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாவிட்டாலும், நானும் ஒரு பெண் என்ற நிலையில் இருந்துகூட இன்னொரு பெண்ணின் அவலத்தை அவரால் புரிந்து கொள்ள முடியுமா? என்பது விடைகாண முடியாத கேள்விதான். வாக்கு வேட்டைக் காலத்தில் நாட்டிலிருக்கும் பெண்களின் பெரும் பலத்தைத் தன்வசப் படுத்துவதற்காக முழங்கப்பட்ட வெற்று வார்த்தைகள்தான் அவை. மற்றும்படி எண்ணத்தால், சிந்தனையால், அவற்றுக் கூடாக வெளிப்படும் செயற்பாட்டால் சந்திரிகாவும் சிங்களப் பேரினவாதக் குட்டையில் ஊறிய மட்டைதான் என்பதை அண்மைக்கால அரசியல் வரலாறு தெட்டத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றது.

பெண்களின் எழுச்சிபற்றியும், முன்னேற்றம் பற்றியும் எழுதும் அல்லது பேசும் பலர் 'இந்திரா காந்தி என்ற பெண் இந்தியாவையே ஆண்டார் சிறீமாவோ என்ற பெண் இலங்கையையே ஆண்டார்.' என்ற ரீதியில் பெண் அரசியல் தலைவர்களை முன்வைப்பதன் மூலம் பெண்களின் பெருமையை எடுத்தியம்புவதாக எண்ணுகின்றனர். உண்மையில் பெண்களின் எழுச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உதாரணங்களாகக் காட்டுவதற்கு எவ்வித அருகதையும் அற்றவர்கள்தான் பெரும்பாலான பெண் அரசியல் தலைவர்கள். ஏனெனில் இவர்களில் அதிகமானோர் தனது தனிப்பட்ட உழைப்பால், முயற்சியால், தனித்துவமான ஆளுமையால், தலைமைத்துவப் பண்பால், உயர்ந்தவர்கள் அல்லர். தகப்பனின் அல்லது கணவனின் அரசியல்ச் செல்வாக்கில் குளிர்காய்பவர்களே இவர்கள். பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழும், வளரும் பெண்களின் பிரதிநிதிகளாக இவர்களை எப்படிக் கருத முடியும். அடிமட்டச் சமூகத்தின் பல சிக்கல்களைக் கடந்துவரும் ஒரு பெண்ணால், தனது சொந்தப் பலத்தில் முன்னேறிய ஒரு பெண்ணால் நாட்டின் தலைமைத்துவம் அலங்கரிக்கப்படுமானால் அவர் ஒட்டுமொத்தமான பெண்களின் முன்னுதாரணமாக இருக்கலாம். தான் கடந்து வந்த பாதையின் அவலங்கள் அவருக்கு மட்டுமே புரிந்திருக்கும் ஏனைய பெண்களின் பிரச்சனைகளையும் உணர்வுகளையும் அவரால் புரிந்துகொள்ள முடிந்திருக்கும் சமூகச்சாக்கடை நரகத்தில் உழலும் பெண்களைக் கைநீட்டி கடைந்தேற்ற முடிந்திருக்கும்.

இனவாத வக்கிரம் கொண்ட சிறீலங்காவின் முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவின் செல்வாக்கில் இருந்தும் அவரது மனைவியாக இருந்து பிரதமரான சிறீமாவின் செல்வாக்கில் இருந்தும் வந்தவர்தான் சந்திரிகா அம்மையார். அவர் ஒரு மகளாகவும் மனைவியாகவும், தாயகவும் இருப்பது உண்மைதான் ஆனால் 'கண்டி உயர் குடி'ப் பெருமை பேசும் இவர்கள் மேற்குலகச் சிந்தனைகளால் தமது உயர்மட்ட வாழ்வை வடிவமைத்துக் கொண்டவர்கள். இச் சூழலில் இருந்து வந்த சந்திரிகா அம்மையாரால் ஒரு சாதாரண வாழ்வில் தாயாக, மனைவியாக, மகளாக இருப்பவர்களின் அபிலாசைகளை, அவலங்களை, சுமைகளை கற்பனையில்க்கூட எண்ணிப் பார்க்க முடியாது.

*"அழுது புலம்பி வேதனைப்படுவதுதான் உங்களின் கதியா – அதனை நிறுத்தினால் என்ன?"*

என்று பிரச்சார மேடைகளில் கேட்டவரின் காலத்தில்தான் பெண்களின் அழுகையும், வேதனையும் அதிகமாகிப் போனது. தமிழ்ப் பெண்கள் மட்டுமல்ல சிங்களப் பெண்களும் கண்ணீரில் தம் கவலைகளைக் கரைக்கும் காலங்கள் உருவானது.

*"இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு போர் ஒரு கருவியல்ல – முதலில் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்"*

எனக் குறிப்பிட்டார். தனது ஆட்சி அதிகாரங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், சிங்களப் பெரும்பான்மை இனத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளில் இருந்து தன்னை மறைத்துக் கொள்ளவும் போரையே கவசமாக்கிக் கொண்டார். போரை வெறுக்கிறேன் என்றவர் போரின் மூலமே சமாதானம் என்றார். சிறீலங்காவின் முழுப் பொருளாதாரத்தையுமே போருக்கு முதலீடு செய்து இராணுவ பலத்தைப் பெருக்கி தமிழ்மக்களின் வாழ்வியல் ஆதாரமான பூர்வீக நிலத்தைப் படிப்படியாக ஆக்கிரமிக்கத் தொடங்கினார். அகதிகளை மீளக் குடியமர்த்துவேன் என்று கூறிய அம்மணியின் உபகாரத்தினால் முன்னெப்போதும் இல்லாத அளவு இலட்சக்கணக்கான மக்கள் ஓரிரவில் உடுத்திருந்த துணியோடும், ஓரிரண்டு பொருட்களோடும் வீட்டைவிட்டு வீதியிறங்கி நடந்த கொடுமை நடந்தது.

கொட்டும் மழையில் அந்த நாவற்குழி வெட்டையில் எத்தனை அவலங்கள் அரங்கேறின. குழந்தையைப் பெற்றெடுத்த நோக்கூட மாறமுன்பு தம் குஞ்சுகளை துணிப் பொட்டலமாய் கைகளில் சுமந்து கொண்டு, தள்ளாடி நடந்துவந்த தாய்மார் எத்தனைபேர். பக்குவமாய் நடக்க வேண்டிய பிரசவங்கள்கூட பலரும் சூழ்ந்திருந்த நடுவீதியில் நடந்த கதை யாரறிவார். அம்மா தண்ணி, அம்மா பசி என தம் கால்களிலும் தோள்களிலும் சாய்ந்து கதறும் மழலைகளின் முகங்களைப் பார்க்க திராணியற்று பெய்யும் மழையையும், வீதிக்கரை மாமரங்களின் உச்சியில் ஆடும் மாங்காய்ப் பிஞ்சுகளையும் ஏக்கத்தோடு பார்த்து விம்மிய தாய்மார்கள் எத்தனைபேர். ஊர்ச்சுடலையில் உறவினர்கள் சூழ்ந்திருக்க நிம்மதியாய் வேகவேண்டும் என விரதம் பிடித்த எத்தனை மூதாட்டிகள் வீதிக்கரைகளில் விறைத்த கட்டைகளாய்க் கிடந்தார்கள். சேலைகளால் கட்டிய மறைப்பில் ஒரு சுண்டு அரிசியில் காச்சிய கஞ்சியை தன் கணவனுக்கும், குழந்தைகளுக்கும் பகிர்ந்து கொடுத்துவிடும் எங்கள் அன்னையரின் இரைப்பைகள் சுருங்கிப் போனது எவருக்குத் தெரியும்?

இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் நெஞ்சுக்குழிகளில் தண்ணீர் இல்லாமல் தொண்டை வறள கழியும் ஒவ்வொரு இரவுகளுமே பயங்கரமானவை. திடீரெனக் கதவு இடித்துத் திறக்கப்பட்டு கணவனையோ, அல்லது பிள்ளைகளையோ, அல்லது தந்தையையோ படையினர் இழுத்துச் சென்றுவிட ஒவ்வொரு இராணுவ முகாம் வாசலிலும் பித்துப் பிடித்ததுபோல் அலைந்து திரியும் பெண்கள்.

'தகப்பனோட வேலைக்குப்போன மகனை செக்பொயின்ரிலவைச்சுப் பிடிச்சவங்கள், அடுத்தநாள் போய்க் கேக்க அப்படி...... நாங்கள் யாரையும் பிடிக்கவில்லை எண்டு சொல்லிப்போட்டாங்கள். இன்னும் தான் என்ர பிள்ளையை விடேல.'

*"என்ர மூத்த மகன பிடிச்சுக் கொண்டு போகேக்குள்ள வயசு 21, இப்ப 23. அவன் தான் எங்கட குடும்பத்த உழைச்சுப் பார்க்கிறவன். உவங்கள் எங்க வைச்சிருந்தாலும் ஆண்டவரே என்ர பிள்ளையை விட்டிட வேணும்."*

*"படிச்சுக் கொண்டிருந்த என்ர மகள பிடிச்சுக் கொண்டு போனவங்கள். இன்னுமே விடேல"*

*"எனக்கு மூண்டு பிள்ளையள். என்ர கணவர பிடிச்சுக் கொண்டுபோய் 2 வருசமாகுது. இன்னும் ஒரு முடிவில்ல. கஸ்ரப்பட்டு அலைஞ்சு கொண்டிருக் கிறேன்."*

இவையெல்லாம் தம் உறவுகளை தொலைத்துவிட்டுத் துடிப்போரின் நெஞ்சை உருக்கும் வேதனைகள்.

யாழ்குடாநாட்டில் மட்டும் இதுவரை காணாமல் போனவர்களின் தொகை 2000 எனக் கூறப்படுகிறது. இவர்களைப்பற்றிய பதில் என்ன? யாரிடம் கேட்பது. புதைத்தவனுக்கு மட்டுமே வெளிச்சமான உண்மைகள் இவை. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி மீதான பாலியல் வல்லுறவு மற்றும் அவரின் குடும்பத்தினர் மீதான கொலை பற்றிய வழக்கு விசாரணை ஒரு கண்துடைப்பு நாடகம்தான். ஆயினும் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட கைதி கோப்ரல் சோமரட்ண ராஜபக்ஷவின் செம்மணி மனிதப்புதைகுழி வாக்குமூலம் சந்திரிகா அரசுக்கு கிணறு வெட்ட பூதம் கிளம்பின கதையாகி விட்டது. தானே புதைத்த இடம் காட்டுவதாக அவன் கூறியும் அரசு அதை ஆறப்போட்டு விட்டது. மாகாண சபைத் தேர்தலுக்கான சந்திரிகாவின் தகிடுதித் தாளங்களாகத்தான் செம்மணி வந்த மண்ணியல் நிபுணர்களும், துரையப்பா விளையாட்டரங்கு மனிதப் புதைகுழி அகழ்வும், வவுனியா, மன்னார் மீதான இராணுவ நகர்வும் அமைந்திருந்தது. தான் கீறிய பெரிய கோட்டைச் சிறிதாகக் காட்ட அதற்குப் பக்கத்தில் இன்னொரு பெரிய கோடு கீறும் முயற்சியாக துரையப்பா விளையாட்டரங்கு மனிதப்புதைகுழிச் செய்திகள் அம்பலமாக்கப்பட்டன. பத்து வருடங்களுக்கு முற்பட்ட புதைகுழி எனக் கூறப்படும் அந்தச் செய்தியின் வீச்சில் செம்மணி விவகாரத்தை மீண்டும் உறங்கப் போட்டாயிற்று.

இது இப்படி இருக்க வடமராட்சி மணற்காட்டுப்பகுதியில் அனாமதேயமாகக் காணப்பட்ட இளம் பெண் ஒருவரின் சடலம் பற்றிய செய்தி உதயன் பத்திரிகையில் வெளிவந்ததையடுத்து இச் செய்தியாளர் இராணுவத்தினரால் தொடர்ச்சியாகவே மிரட்டப்பட்டுள்ளார். கூட்டிக் கழித்துப் பார்த்தால் 17 வருடகால ஆட்சியில் ஐ.தே.க செய்யத் தவறியதை நாம் எமது இருவருட ஆட்சியில் செய்து முடித்துள்ளோம். இந்திய அமைதிகாக்கும் படை மூலம் கடந்த அரசாங்கம் செய்ய எத்தனித்ததை நாம் எமது சொந்த இராணுவத்தின் மூலம் நிறைவேற்றியுள்ளோம் எனக் கூறியுள்ள சந்திரிகா, மற்றெல்லோரையும்விட தான் அதிகமாகச் செய்துவிட்டேன் என்று செம்மணிக் கணக்கைவைத்துக் கொண்டுதான் கூறியிருக்கிறார் போலிருக்கிறது.

1997 மே 17 அன்று அம்பாறை சென்றல்காம் முதலாம் கொலனியைச் சேர்ந்த 35 வயது நிரம்பிய கோணேஸ்வரி என்ற 3 குழந்தைகளின் தாய் பொலிஸாரால் கூட்டாகப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு பிறப்புறுப்பில் குண்டு வைத்து கொலை செய்யப்பட்டார். இப்படி இன்னும் அங்கு எத்தனையோ கோணேஸ்வரிகள் யுத்த சூழலில் [illegible] நோக்கும் பிரச்சினைகள் என்ன? என்ற தலைப்பில் பெண்கள் அமைப்பால் நடத்தப்பட்ட கலந்துரையாடல் ஒன்றில் எல்லைப்புறக் கிராமம் ஒன்றைச்சேர்ந்த சாந்தினி என்ற பாடசாலை ஆசிரியை இவ்வாறு கூறினார். நான் படிப்பிக்கும் பாடசாலையில் உள்ள மாணவிகள் வைத்தியசாலையில் பாலியல் நோய்களுக்கென சிகிச்சை பெறுவதற்காகக் காத்துக் கிடக்கின்றனர். இராணுவத்தினர் இப் பெண்களை தமது இச்சைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதால் இவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்றார்.

வடக்குக் கிழக்கிற்கான பொருளாதாரத் தடையை நீக்குவேன் எனக் கூறியவரின் ஆட்சியில் குழந்தைகளுக்கான பால்மா கூடப் பற்றாக்குறையாக உள்ளது. கர்ப்பிணிகள் போசாக்கின்மையால் அவதிப் படுகின்றனர். விடுவிக்கப்பட்ட பிரதேசம் என சந்திரிகா அரசு கூறிக்கொள்ளும் யாழ்ப்பாணத்தில் மட்டும் 23,000 குழந்தைகள் கடும் போசாக்கின்மையால் வாடுகின்றனர். இப்படியான செயற்பாடுகள் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் ஆரோக்கியமான எதிர்காலத்தையே அழிக்கலாம் என சந்திரிகா நினைக்கிறார் போலும்.

சிங்களப் பெண்களும் பல அவலங்களைச் சந்திக்கின்றனர். கொடிய வறுமை காரணமாக படையில் சேர்ந்துள்ள தம் தந்தையை, மகனை, கணவனைப் பற்றிய எந்தவித செய்திகளும் இல்லாமல், அவர்களுக்கு என்ன நடந்தது என்றே தெரியாமல் துடித்துக் கொண்டிருக்கின்றனர். முல்லைத்தீவுச் சமரில் கைப்பற்றப்பட்ட இராணுவ உடல்களை ஒப்படைத்தபோது இது எமது படையினரின் உடல்களே அல்ல எனக் கூறிய சந்திரிகா அரசு அந்தப் படையினரின் குடும்பங்களுக்கு என்ன கூறியிருக்கும். அந்த ஏழைச் சிங்களப் பெண்களின் கதி என்ன? மாறி

தொடர்ச்சி 11-ம் பக்கம்

# ஊர்வலம்

—தாமரைச்செல்வி—

எப்படியும் ஊர்வலம் தொடங்க ஒன்பது மணியாகிவிடும். எட்டே முக்காலுக்கு முருகன் கோவிலடிக்குப் போனால் போதும். செய்வதற்கு ஏராளம் அலுவல் இருக்கிறது. ஆனால் ஒன்றையும் செய்ய இயலவில்லை.

வெகுநேரமாய் குடிசைத் திண்ணையில் அமர்ந்து தெருவைப்பார்த்துக் கொண்டிருந்தான். நாலைந்து பேராக ஆட்கள் தொடர்ச்சியாய் போய்க் கொண்டிருந்தார்கள். இவர்கள் எல்லாம் ஊர்வலத்திற்குப் போகிறவர்களாகத்தான் இருக்கவேண்டும். அவனும் ஊர்வலத்துக்குப் போவதற்குத்தான் காத்துக்கொண்டிருக்கிறான். எந்த ஊர்வலமானாலும் அதில் கலந்து கொள்ளாமல் அவனால் இருக்கமுடியாது. அது சிறுவயதிலிருந்து அவனுடன் ஒன்றிப்போய் விட்ட இயல்பு.

இன்றைக்கு காலையிலிருந்தே நல்ல வெய்யில் எறிக்கிறது. இப்போதே சூடேறி விட்டது. அவன் சாலை மடித்து வைத்து மரக்கப்புடன் சாய்ந்து கொண்டான்.

நாலு நாள் தாடி அவன் முகத்தில் இருந்தது. கைகளால் பரபரவென்று முகத்தைத் தேய்த்துக் கொண்டான். கண்களில் பசிக்களைப்பு இருந்தது. காலையிலிருந்து எதுவும் வாய்க்குள் விடவில்லை.

'மல்லிகா. ஏதும் தண்ணி வென்னி இருக்குதே குடிக்க..' காட்டுத் தடிகளினால் வரையப்பட்ட குடிசையின் ஒரு பகுதியைப் பார்த்துக் கேட்டான். 'வாறன் கொஞ்சம் பொறுங்கோ...' உள்ளிருந்து குரல் மட்டும் கேட்டது.

காலையில் இருந்த சில்லறைக் காசுகளைப் பொறுக்கி அரை றாத்தல் பாண் வாங்கி சின்னனுகளுக்கு கொடுத்தாகி விட்டது. மூத்தவன் பதினேழு வயது பவுண் அதிகாலையிலேயே விறகு வெட்டி கட்டிவர முட்கொம்பன் காட்டுக்குப் போய் விட்டான்.

மீசை அரும்பத் தொடங்குகின்ற இந்த வயதில் அவன் குடும்பச் சுமையில் பாதியைத் தாங்குகின்றான் பள்ளிக்கூடப் பக்கமே போவதில்லை. டயர் தேய்ந்த ஒரு பழைய சைக்கிளில் எந்நேரமும் திரிந்து கொண்டேயிருப்பான்.

மறுபடி தெருவைப் பார்த்தான் தொடர்ந்து எத்தனை பேர் போய்க் கொண்டிருக்கின்றார்கள் அவனும் போகவேண்டும்.

குடிக்க ஒரு தேநீராவது கிடைக்காதா என்ற எதிர்பார்ப்பில் பார்வையை அலைய விட்டுக்கொண்டிருக்கையில் எதிர் வீட்டு யோகன் 'ரத்தினண்ணை! ஊர்வலம் தொடங்க கொஞ்சம் நேரமாகும் போல கிடக்கு. இப்பதான் சுலோகம் எழுதுகினம். சனம் இப்பவே நிறைய வந்திட்டுது' எட்டிச் சொல்லி விட்டுப் போனான்.

சுலோகம் என்றதும் அடுக்கடுக்காய் வார்த்தைகள் மனதுக்குள் கோர்த்துக் கொண்டு நின்றன. அந்த நாட்களில் அவன் அடுக்கு தமிழில் எத்தனை சுலோகங்கள் எழுதியிருப்பான்.

குரல் அடைக்க உச்சத்தில் முழங்கிக் கொண்டு ஊர்வலங்களின் முன் வரிசைகளில் நடந்திருப்பான்....

எத்தனை ஊர்வலங்களை தன்வாழ்நாளில் அவன் பார்த்து விட்டான். அவனுடைய ஞாபகப்பரப்பில் எழுபதாம் ஆண்டுகளின் நினைவுகள்கூட அழியாது பதிந்திருக்கின்றன. அப்போது அவனுக்கு பதினேழு வயது. மெல்லிய உயரமான தோற்றத்தில் இருந்த அவனுக்கு மெலிதாய் மீசை அரும்பத் தொடங்கிய வயது.... நாடெங்கும் தேர்தல்கள் சூடு பறந்த நேரம்

'தமிழ்' 'தமிழ்' என்று மேடையெல்லாம் அடுக்கு வசனங்களில் பேசியவர்களை தலைவர்களாக நினைத்த காலங்கள்.

வேட்டி சட்டை அணிந்து. யாரைக் கண்டாலும் இரு கைகளையும் தமது இடது தோளுக்குமேல் துக்கி கூப்பி வணக்கம் சொல்லி வசீகரமாக சிரிக்கும் தலைவர்களின் வெற்றிக்காக அவனும் அவனின் நண்பர்களும் ஓடி ஓடி உழைத்த காலங்கள் அடுக்கு வசனங்கள் எழுதி சுவரொட்டி ஒட்டுவது கூட்டங்களுக்கு வீடு வீடாகப் போய் ஆட்கள் சேர்ப்பது ... கூட்டங்களை ஒழுங்கு படுத்துவது... ஒலிபெருக்கி வாகனத்தில் ஒழுங்கை ஒழுகையாய் அலைவது... என்று எத்தனை வேலைகள்...

மாபெரும் ஊர்வலத்துடனான பொதுக் கூட்டம் ஒருநாள் நடக்கும். இரவு பகல் உறக்கமில்லாமல் அலைவார்கள். பரந்தன் சந்தியிலிருந்து கிளிநொச்சி றொற்றிக்கோ மைதானம் வரை தெருவின்




இரண்டு பக்கமும் தோரணம் கட்டுவார்கள் மூன்று மணிக்கு தொடங்கும் ஊர்வலம் மைதானம் வர ஆறுமணியாகி விடும்.

கணபதி நேர்த்தியாக லாவகமாக நிலபாவாடை விரித்துக் கொண்டு போவான். தெரு நீளத்துக்கும் ஊர்வலம் முழுவதும் கணபதி வெறும் கால்களுடன் ஓடி ஓடி நிலபாவாடை விரிக்க அதில் தலைவர்கள் கும்பிட்டபடி உற்சாகமாக புன்னகைத்தபடி பாதணிகளை அழுத்தி நடந்து வருவார்கள். கணபதி நிலபாவாடை விரித்த காசு கூட வாங்கிக் கொள்ளமாட்டான்.

ஊர்வலம் வந்து சேரும் போதே மின்விளக்குகள் பளிச்சிடத் தொடங்கிவிடும், மைதானத்தில் வண்ணக்காகிதங்களினால் அலங்கரிக்கப்பட்ட பெரிய மேடை... பின்னணித்திரையில் பிரமாண்டமாய் கட்சிச்சின்னம்... மேடைகளில் அலங்கார நாற்காலிகள்...

பிற இடங்களிலிருந்தும் வந்திருந்த மற்றையதலைவர்கள், கட்சிப்பேச்சாளர்கள் மேடையில் அமர்ந்திருப்பார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து தலைவர் வந்திருப்பதால் கூட்டம் முக்கியத்துவம் பெறும். அந்தத் தலைவரின் அடுக்கு வசனப் பேச்சுக் கேட்க கூட்டம் அலைமோதும்.

தலைவர் பேச எழுந்ததும் உணர்வுகள் பொங்க இளைஞர் கூட்டம் மேடையை நோக்கி நகரும், முதலாவதாக அவன் தான் மேடையில் ஏறுவான், சர்ரென்று பிளேடினால் விரல்கிழித்து பொங்கிவரும் ரத்தத்துளிகளால் தலைவரின் நெற்றியில் பொட்டுவைப்பான். அவனைத் தொடர்ந்து பலர் பொட்டு வைப்பார்கள் கூட்டம் ஆரவாரித்து கைதட்டும் ஓசை வானைத் தொடும்.

தலைவருக்கு மாலைகள் போட மக்கள் வரிசையில் நிற்பார்கள். போடும் மாலைகளை தலைவர் புன்னகை முகத்தோடு கழற்றிவைத்துக் கொண்டேயிருப்பார். அந்த மாலைகள் பின்வழியாக மாற்றப்பட்டு தொடரும் வரிசைகளில் சேர்க்கப்பட்டுவிடும். மறுபடி அதே மாலைகள் மேடைக்கு வரும். தலைவருக்கு இத்தனை மாலைகளா என்று கூட்டம் பிரமிக்கும். தலைவர் பேச எழுந்ததும் கூட்டத்தில் அமைதி நிலவும்.

மழைபோல பெய்யும் வார்த்தைக் கோலங்களை கேட்டுக் கொண்டு அவன் மேடை ஓரத்தில் நிற்பான். 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றி மூத்த தமிழ்' என்று ஆரம்பித்து 'தூக்கு மேடை பஞ்சு மெத்தை...' 'துப்பாக்கிக் குண்டு விளையாட்டுப் பந்து' என்று பல அடுக்கு வசனம் சொல்லித்தான் பேச்சை முடித்துக் கொள்வார்.

கைதட்டல்களால் அந்தப் பிரதேசமே அதிரும் அன்றைக்கு - அந்தக் கணத்தில் அந்தக் காட்சியும் அந்தத் தலைவர்களும் அவர்களது வெற்றியுமே உலகின் முதன்மையான விடயமாக அவனுக்கு தோன்றும். அந்தத் தலைவரிடம் வேலை கேட்டு அலைந்து காசு கட்டித் தோற்றுப் போன ஒருவன் தலைவரை கேவலமாக பேசி விட்டதற்காக அவனை அடித்து விழுத்தி மோசமாக தாக்கியிருக்கிறான். 'ரத்தினம் வாற திங்கள் கிளிநொச்சி கந்தசாமி கோயில்லயிருந்து மைதானம் வரை ஊர்வலம் வரவேணும் எல்லாருமாய் ஒழுங்கு செய்யுங்கோ'

தலைவர் ஒரு வார்த்தை சொன்னால் போதும். அவன் தன் நண்பர்களுடன் செய்து முடிப்பான். இளம் வயதின் வேகம் அது. எழுபத்தேழாம் ஆண்டு தேர்தல் தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்த தேர்தல். இருபத்திநாலு வயதில் இன்னும் அதிக திறமைகள் அவனுக்கு ஏற்பட்டிருந்தது. அப்போது கார் ஒன்று வைத்திருந்து வாடகைக்கு ஓடி உழைத்துக் கொண்டிருந்தான்.

தன் காரில் சொந்தக் காசில் பெட்ரோல் போட்டு கிளிநொச்சி எங்கும் ஒலிபெருக்கி கட்டித் திரிந்தான். இம்முறை ஊர்வலத்தில் ஊர்திகள் செய்தார்கள். வேடம் போட்டு ஆடினார்கள் உழவு யந்திரங்கள் அலங்கரிக்கப்பட்டு தலைவர்களுடன் நகர்ந்தன.

ஊர்வலத்தில் கடலாய்த் திரண்ட கூட்டத்தை கட்டுப்படுத்த சிரமப்பட்டார்கள், உணர்வு பொங்க எழுதப்பட்ட சுலோங்களை உரக்க கூவிக்கொண்டே மக்கள் வெய்யிலுக்குள் நடந்தார்கள். அன்று மேடையில் அவனும் கவிதை படித்தான். நான்கு பேருக்கு நெற்றியில் ரத்தத்திலகம் வைத்தான். அவையெல்லாம் இப்போது கனவாகிப்போன சம்பவங்களாகிவிட்டன.

அதன் பிறகு நாட்டில் எத்தனையோ மாற்றங்கள், அரசியலும் அதன் பின்னணியும் இன்னொரு விதமாய் வளர்ந்தது, எழுபத்தேழாம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு உழைத்து வந்த காரும் கடனுக்குப் போய்விட்டது, பல சுமைகள் மனதை அழுத்தின, அதன் பிறகும் ஊர்வலங்கள் நடந்தன. புற சூழலின் சுமைகளை ஒதுக்கி அவன் ஊர்வலத்தில் முன்னணியில் கலந்து கொண்டான். இது அவனுடைய பாமர நெஞ்சில் ஊறிப்போன விஷயமானது. கல்யாணம், பிள்ளைகள் என்று குடும்பம் வளர்ந்தது. படிப்பில்லாத காரணத்தால் கூலிவேலைதான் தொழிலாயிற்று. பிள்ளைகளுக்கும் படிப்பு அவ்வளவாக ஏறவில்லை என்பது மிகுந்த கவலையத் தந்தது.

சொந்த இடத்தில் இருக்கும் வரை சாப்பிட வழி இருந்தது. இப்போது இடம் பெயர்ந்த பிறகு எந்தத் தொழிலும் செய்ய முடியவில்லை. அரை வயிற்றுக் கஞ்சிக்கு நாயாய் அலைய வேண்டியிருந்தது. இப்போது ஊர்வலங்களின் தேவைகளில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. தவிர்க்க முடியாத சமூகமாற்றமாக அவை மாறிவிட்டன. வெய்யில் எறித்தாலும் சரி மழை கொட்டினாலும் சரி எங்கே ஊர்வலம் நடந்தாலும் அவனால் கலந்து கொள்ளாமல் இருக்க முடியாது.

இன்றைக்கும் நிவாரண வெட்டை எதிர்த்து முருகன் கோவிலடியிலிருந்து புறப்பட்டு கச்சேரிக்கு ஊர்வலம் போகிறது. அவன் திண்ணையிலிருந்து எழுந்தான். ஒன்பது மணி ஆகியிருக்கும், மல்லிகா தேனீர் கொண்டு வந்து தரக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் நின்று திரும்பிப் பார்த்தான்.

'இந்தாங்கோப்பா... ஊர்வலம் முடிஞ்சு எப்பவாறீங்களோ... இதைக் குடிச்சிட்டுப் போங்கோ' மல்லிகா வெறும் தேநீரைக் கொடுத்தாள், இனிப்பு அதிகம் இல்லாவிட்டாலும் மெல்லிய சூட்டில் தொண்டைக்குள் இதமாக இறங்கியது. மரக்கப்பில் தொங்கிய நைந்துபோன சட்டையை எடுத்து போட்டுக் கொண்டான். 'போயிட்டு வாறன்' என்று செல்லிவிட்டு முற்றத்தில் இறங்கும் போதே மத்தியானம் சமைப்பதற்கும் மல்லிகா என்ன செய்வாள் என்ற கேள்வி நெஞ்சு வரை எழுந்தது.

'பவுண் விறகை வித்துப் போட்டு காசு கொண்டு வருவான், அதில் பார்த்து நான் வாங்கி சமைக்கிறன்' கொஞ்சம் மனம் நிம்மதியானது, இன்றைய பொழுதின் பிரச்சினை தீர்ந்த ஆறுதல். அவன் முற்றம் கடந்து வாசலுக்குப் போன போது பவுண் வெறும் சைக்கிளை தள்ளிக் கொண்டே உள்ளே நுழைந்தான். பாரம் சுமந்தே தேய்ந்து போனான்.

'கட்டி வந்த விறகை சந்தைக்குப் பக்கத்து ஒழுங்கையில் வாங்கியிட்டினம் அதுதான் வெள்ளன வந்திட்டன்.' பவுண் சைக்கிளை நிறுத்திவிட்டு மூச்சை இழுத்து விட்டுக்கொண்டான். முகத்தின் வியர்வையை கைகளால் வழித்து உதறினான் 'பவுண்! ஊர்வலத்துக்கு நீயும் வாறியே...' பவுண் ஒரு வினாடி யோசித்து விட்டு 'அதுக்கென்ன வாறன். ஆனால் இந்த ஊர்வலங்களை நடத்திறதால மட்டும் எங்கட பிரச்சினை தீர்ந்திடுமே -' என்றான் பட்டென்று. அவன் ஒரு கணம் திகைத்துப் போய் பவுணைப் பார்த்தான் பவுணின் வார்த்தைகள் அவன் மனதை சுரீரென்று வந்து தாக்கியது. ஒரு துக்கமான உணர்வு வந்து தொண்டையை அடைத்துக் கொண்டது. அந்த அடைப்புக்குள் தனது இழப்புக்கள் அனைத்தும் சிக்கிக் கொண்டது போன்ற உணர்வு -

தன்னுடைய பதினேழு வயதில் தனக்கு ஏன் இது தோன்றாமல் போயிற்று என்று கவலையோடு நினைத்துக் கொண்டான்.

## இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

வன்னியின் எண்பது விழுக்காடான பகுதிகள் விடுதலைப் புலிகளால் மீட்கப் பட்டுவிட்டன. மேலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்து வன்னிநிலப்பரப்பில் மும்முனைகளில் வெற்றிகரமாக முன்னேறி வருகின்றனர். சிறீலங்கா இராணுவத்தினர் பல பில்லியன் ரூபாக்கள் பெறுமதியான ஆயுதங்களையும் இராணுவத் தளபாடங்களையும் போட்டுவிட்டு தமக்கு ஏற்பட்டுவரும் பாரிய உயிர் இழப்புக்களுக்குள் தாமும் சிக்கிவிடாது தப்ப தலை தப்பினால் போதும் என ஓடுவதை களச்செய்திகள் தெரிவிக்கின்றன. இவை தமிழீழத் தேசவிடுதலை உறுதியாகி வருவதை உலகிற்கு உணர்த்தியுள்ளது.

இந்த நேரத்தில் சர்வதேச மட்டத்திலும் சிறீலங்கா சுதந்திரமற்ற நாடு என்ற கருத்து இறுக்கமாக வலுப்பெற்று வருகிறது. இலண்டனில் உள்ள வெளிநாட்டுக் கொள்கைத் திட்டமிடல் மையம் சிறீலங்கா தனது குடிகளை நடாத்தும் முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தாவிட்டால் சிறீலங்காவை பொதுநலவாய நாடுகளின் அமைப்பில் இருந்து விலத்தவேண்டுமென ஆலோசனை கூறியுள்ளது. இந்த அமைப்பின் தலைவராக பிரித்தானியாவின் வெளிவிவகாரச் செயலர் மதிப்பிற்குரிய ரொபின் குக் அவர்களும் போஷகராக பிரித்தானிய பிரதமர் மாண்புமிகு ரொனி பிளேயர் அவர்களும் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

சிறீலங்காவின் மனித உரிமை மீறல்கள், செய்தித் தணிக்கை கொடுமைகள் காரணமாக சிறீலங்கா சுதந்திர நாடொன்றிற்கான தகைமை சோதனையில் தவறிவிட்டதாகக் கருதியே இவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டுக் கொள்கைத் திட்டமிடல் அறிக்கை விளக்கியுள்ளது. மேலும் உலக அமைப்புக்கள் சிலவற்றிலும் அங்கு பணியாற்றி வந்த சிங்களவர்களை அவை விலக்கியுள்ளதாக சிறீலங்காவின் முன்னாள் வெளிவிவகார நிர்வாக செயலாளர் குணசே குற்றம்சாட்டி உள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவை எல்லாம் சர்வதேச மட்டத்தில் சிறீலங்காவின் பரப்புரைகளின் போலித்தனங்கள் வெளியாகி வருவதை விளக்கி நிற்கின்றன.

இலங்கைத்தீவுக்கு உள்ளும் வெளியும் தமிழீழ மக்கள் குறித்த உண்மை நிலைகள் தெளிவாகி வருவதினால் தமிழீழ விடுதலை விரைவுபெற்று வருகிறது என்பதில் எவருக்குமே சந்தேகமில்லை. ஆனால் இந்த விடுதலையை விரைவாக்க வேண்டிய பொறுப்பு, ஈட்டிய வெற்றிகளை சர்வதேச மயப்படுத்த வேண்டிய கடமை புலம்பெயர் தமிழர்களாகிய நம்முடையது. இதற்கு இரண்டு வழிகளில் நாம் வேகமாகச் செயற்படல் வேண்டும். ஒன்று எம் தேசத்தையும் மக்களையும் காத்துநிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி அளித்து அவர்களின் கரத்தை பலப்படச்செய்வது. அடுத்தது தமிழீழத்தின் இருக்கையை உலகறியச்செய்து அங்கே தமிழீழ மக்களின் அரசு நோக்கிய அரசு ஒன்று 1990 முதல் ஒரு அரசாங்கத்திற்கு இருக்கவேண்டிய அனைத்து பண்புகளுடனும் செயற்பட்டு வருவதை எடுத்து விளக்கவேண்டும். இந்த அரசுக்கு இல்லாதது சர்வதேச அங்கீகாரம் ஒன்று மட்டுமே என்பதை எடுத்து விளக்கி இதனை சர்வதேச நாடுகள் வழங்கும்வரை சிறீலங்கா தமிழ் மக்களை இனஅழிப்பு செய்தாவது தமிழர்களின் அரசியல் பணிவினை தனது ஆக்கிரமிப்பு அரசாங்கத்திற்கு பெறுவதற்கே முக்கியத்துவம் கொடுக்கும். இதனால் தமிழர்களின் இனஅழிப்பு நிறுத்தப்படுவதற்கு தமிழீழ அரசு நோக்கிய அரசுக்கான சர்வதேச அங்கீகாரம் மிக முக்கியமான தேவையாக உள்ளது. இதனைத் தேடிக் கொடுக்கும் பெரும் பணி தமிழீழ புலம்பெயர் மக்களாகிய எம்முடையது.

மேலும் விடுவிக்கபட்ட எங்கள் தாயகப் பகுதிகளுக்கு சென்றவர்கள் அங்கே எங்கள் தாய் மண்ணின் இயற்கை வளங்கள் வனப்புக்கள் எல்லாம் சிறீலங்காப் படைகளினால் திட்டமிட்ட வகையில் தரைமட்டமாக்கப்பட்டுள்ள கோரத்தை கண்டு கண்ணீர் வடிக்கின்றனர். அந்த எங்களின் சொந்த மண்ணை, மக்களை மீளவும் கட்டி எழுப்ப வேண்டிய கரங்களாக எங்கள் கரங்கள் உள்ளன. மதி வேண்டும். நிதி வேண்டும். கூட்டுறவு கூடியுழைப்பு வேண்டும். இவற்றைச் செய்வதற்கு இப்பொழுதிருந்தே நாம் நமது தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச பணிமனைகளுடன் நம்மை இணைத்துக் கொள்ளவேண்டும்.

வணங்கா வன்னி மண் மீளவும் யாருக்கும் தலைவணங்கா என்ற உண்மை எங்கள் தலைவனாலும் மக்களாலும் நிரூபிக்கப்பட்ட வெற்றிக்களிப்பு எம்மைப் பிடித்தாட்டும் இந்நேரத்தில் எம் தாயகம் முழுவதையும் விடுவிக்கும் பெரும்பணி நம் பணியாக தொடரவேண்டும் என்பதை நாம் மறக்கக்கூடாது. தமிழீழத்தின் தரையும் கடலும் வானும் எதிரியின் வரவைத் தடுக்கும் வேகமான வளர்ச்சிக்கு நாம்தான் துணைசெய்ய வேண்டியவர்களாக உள்ளோம். புலம்பெயர் தமிழர்களின் பணிகளையும் வெற்றிகளின்பொழுது எம் தலைவனும் எம் மக்களும் எண்ணிப்பார்க்க என்றும் மறந்ததில்லை. நாம் வேறு நம்நாடு வேறல்ல. நாம் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் சிங்கள சிறீலங்காவின் இனதுன்புறுத்தல்களால் வாழ்ந்தாலும், எங்கள் இதயத்துடிப்பின் வேகத்தை நிர்ணயிப்பது எங்கள் தேசத்தின் நடவடிக்கைகளே. எனவே மகிழ்கின்றோம் எங்கள் மக்களின் பெரு வெற்றிகளில். தொடர்வோம் எங்கள் உதவிகளை, உழைப்பை எங்கள் நாடு விடுதலை பெறும்வரை.

வணக்கம்
அன்பின் ஆசிரியர்
(18.11.1999)




### பிரான்ஸ்

காலம்: 28.11.1999 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 3.00 மணி
இடம்: L.S.C.
144/146, Avenue du Prèsident Wilson,
93210 La Plaine St. Denis.
M°: Porte de la Chapelle
RER-B: La Plaine - Stade de France.

காலம்: 28.11.1999 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 3.00 மணி
இடம்: FOYER ALTRAM,
22, Rue de Provence,
MULHOUSE.

### இத்தாலி

காலம்: 28.11.1999 பலெர்மோ மாநகரில்
இடம்: Ranchibile (Don Bosco) அரங்கம்,
Via. Libeta - Palermo.

காலம்: 28.11.1999 றெஜியோ எமிலியாவில்
இடம்: SALA REGO அரங்கம்
Via. Agosti N° 06,
Reggio Emilia.

### நோர்வே

| | |
|---|---|
| Oslo: | 27.11.99 சனி<br>மாலை 6 மணி<br>Folkethus, Oslo. |
| Bergen: | 04.12.99 சனிக்கிழமை<br>மாலை 6 மணி |
| Trondhejm: | 28.11.99 ஞாயிறு<br>மாலை 6.30 மணி |
| Stavanger: | 27.11.99 சனிக்கிழமை<br>மாலை 6 மணி |
| Flora: | 27.11.99 சனிக்கிழமை<br>மாலை 6 மணி |
| Tromso: | 27.11.99 சனிக்கிழமை<br>மாலை 6 மணி |
| Narvik: | 27.11.99 சனிக்கிழமை<br>மாலை 5 மணி |

### டென்மார்க்

காலம்: 27.11.99 சனிக்கிழமை
நேரம்: மாலை 4.30 மணி
இடம்: Kongrescenter
7400 Herning.

### லண்டன்

காலம்: 27.11.1999 சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 4.00 மணி
இடம்: London Arena,
Limeharbour,
London E14 9TH.

### ஜேர்மனி

காலம்: 04.12.1999 சனிக்கிழமை
நேரம்: 16:30 மணி
இடம்: Rhein Ruhr Halle
**Walter Rathenau Str. 1a,**
**47166 Duisburg.**

### சுவிஸ்

காலம்: 04.12.1999 சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 2.00 மணி
இடம்: BEA EXPO - HALLE 12,
3000 BERN.

Wangdorf, Ausfahrt *எடுத்து* Zentrum *நோக்கி வரவும்.* Wangdorf *செல்லும் 9-ம் இலக்க* Tram *இல் கடைசித் தரிப்பிடம்.*

### நெதர்லாந்து

காலம்: 28.11.99 ஞாயிறு
பி.ப. 2மணி
இடம்: MARESCA, Sartreweg 1-3,
UTRECHT
(VEEMARKT இற்கு அருகில்).

*மண்டபத்திற்குச் செல்லும் வழி:* பஸ் பயணிகளுக்கு:
UTRECHT C.S புகையிரத நிலையத்திலிருந்து BILTHOVEN நோக்கிச் செல்லும் 57ம் இலக்க பஸ்ஸின் VEEMARKT தரிப்பிடத்தில் இறங்கவும்

வாகனத்தில் வருபவர்களுக்கு:
UTRECHT இற்கும் HILVERSUM இற்கும் இடையில் உள்ள வெளிச்செல்லும் பாதையான VEEMARKT ஊடாக வெளியேறவும்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

## நரகத்துழலுவதோ...

மாறி ஆட்சிக்கு வரும் இனவாத ஆட்சியாளர்களின் உயர்குடிப் பெருமைகளைப் பாதுகாக்க பிள்ளைகளைப் பலியிடுவதா? பணத்திற்காக தம்பிள்ளைகளை படையிற்கு அனுப்பிவிட்டு பிணத்தைக் கூட காணமுடியாமல் தவிப்பதா? அவர்கள் வீதியில் இறங்கவேண்டிய வேளை வந்துவிட்டது. பொய்முகத்திரையைப் போட்டுக் கொண்டு ஆட்சி நடத்தும் சந்திரிகாவின் முகத்திரையைக் கிழிக்கவேண்டுமானால் அவர்களின் குரல் விண்ணதிர எழவேண்டும். எனினும் அது அவர்களின் பிரச்சினை. முடிவு அவர்களைப் பொறுத்தது.

வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதளவு துன்பம் சுமந்து நரகத்துழலும் தமிழீழப் பெண்களுக்கெதிரே ஒரு தெளிவான ஒளி இருக்கிறது. எதிர்காலத்திற்கான நம்பிக்கை இருக்கிறது. விடுதலையை விரைவாக்கிவிட்டுள்ள எமது விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து போராடி வெல்லுவதன் மூலம் புலரும் எம் தாயக விடியலில் உலகிலுள்ள துன்பப்பட்ட பெண்களின் விழிநீரைத் துடைப்பதற்கும் பலம் கொண்ட எமது கைகளை நீட்ட முடியும்.

# வழிப் பயணம்

காட்டு வழியெனினும் காலை வை
காலப்பணிக்கெனக் கண்திறந்தால்
ஒப்புக்கொடுக்கும் வரை ஓயக்கூடாது.
முள்ளேறும்,
மூச்சிரைக்கும்
கருவேலம் முட்கள் கண்ணைக்கிழிக்கும்
ஆனை நடுவழியில் அடிக்கும்
அதனாலென்ன?
விடுதலைக்கான வீதி இது ஒன்றே.
எனவே காட்டுவழியெனினும் காலை வை.
துயரேற்றும் சுடுமணற் பாதைதானிது.

இது காட்டுவழியெனக் கலங்கினால்
பூட்டிய விலங்குகள் பொடிபடமாட்டாது.
அல்லலுற்றாயினும் இவ்வழி கடந்தால்
அப்பாலிருப்பது ஆனந்தநகரம்
விடுதலை.
அடக்குவோரற்ற அழகாபுரி.
எம்மை நாமேயெழுதும் எழிலூர்.
இந்த நரகிற்கிடந்துழல்வதிலும்
நடக்கத்தொடங்கி நடுவழியிற் செத்தாலென்ன?
அது நன்று.
ஊரெல்லை வந்து நிற்கிறதாம் நெருப்பாறு
அதை ஏறிமிதித்து எதிர்கொள்ளு.
இது வரலாற்றுக் கடன்.

அடிக்கடி அயர்வும்,
அலைச்சலும்,
தாகமும் எழும்.
என்னசெய்வது விடுதலைக்கான வீதி இது ஒன்றே.
எனவே நடக்கவேண்டியது நம்கடன்
இடையிடையே நெடும் பாலை நேர்கொள்ளும்
கொடுந்தீபரவிக் கொழுந்துவிடும்.
தடுமாறல் கூடாது.
தளர்வேதும் ஆகாது.
தடக்கிவிழ நேரினும் எழு
மீண்டும் முன்னே செல்.
உயிர்போகிலும் உன்னை விட்டெறிந்துவிட்டு
தொடரும் உறவுகளைத் துணிவுடன் நடக்கச்சொல்லி ஏனெனில்
விடுதலைக்கான வீதி இது ஒன்றே.
நடக்கவேண்டியது நம்பணி
பகை தோண்டிய குழிகள்
அடிக்கடி பாதையில் எதிர்கொள்ளும்
தாகமெழும் நேரம் தண்ணீர் தருவதாக
கானல் நீரைக் காட்டுவார்கள் கவனம்.
நிழலில் ஆறவருமாறு அழைப்பர்
மாரீசத்தில் மயங்கக் கூடாது.
மயங்கிய எம்மவர் சிலர்
அதோ அம்மணமாக நிற்கின்றனர்.
ஆகவே அடிக்கடி தீக்குளி,
தினமும் புதுமனிதனாகத் திரியலாம்.

வயதெல்லை கிடையாது.
துளிரும், சருகும் துணியும்பொழுது
பூவும், வண்டும் புறப்படும் நேரம்.
சரி தயாராகிவிட்டதா தமிழர் சேனை?
எல்லோர் கையிலும் ஏதாவது இருக்கட்டும்.
பொல்லு,
பிக்கான் பிடி,
கல்லு,
காட்டுக் கத்தி,
வேட்டைத் துப்பாக்கி
எதிர்கொள்ள எவனும் வரமாட்டான்.
அடம்பன் கொடியாய் திரண்டமிடுக்குடன்
பயணம் ஆரம்பம்.
பகலிரவென்றிடும் பொழுதினி இல்லை
துக்ள்படும் காலிடை எதிரிகள் தொல்லை.
நடைவழிப்பயணம் நாளையே தொடங்கும்
புலிகளை எதிர்கொள்ள எவனுக்கு முடியும்?
இது நடக்குமென நம்பி
காட்டு வழியெனினும் காலைவை.
காலப்பணிக்குக் கண்திறந்தால்
ஒப்புக் கொடுக்கும் வரை ஓயக்கூடாது.

புதுவை இரத்தினதுரை

